விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஐப்பசி 06 சனிக்கிழமை (23.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# புலிகளின் நியாயங்களை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்

## இந்தியாவிடம் உருத்திரகுமாரன் வேண்டுகோள்

(வாஷிங்டன்)

**இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள தடை உத்தரவினை நீக்குவது குறித்த தமது பக்க நியாயங்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கையை நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் முன்வைத்துள்ளார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்குவது குறித்த வழக்கு விசாரணைகளை மேற்கொண்டுவரும் தனிநபர் நீதிமன்றின் முன்னால் ஆஜராகி தமது பக்க வாதங்களை முன்வைக்க வாய்ப்பளிக்குமாறு நாடுகடந்த தமிழீழ இராச்சிய பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீதிமன்றின் சுயர்தீனத்தன்மை பாதுகாக்கப்பட வேண்டுமென விஸ்வநாதன் உருத்திரகுமாரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது பக்க நியாயங்களை எடுத்துரைப்பதற்கு சந்தர்ப்பம் (18ஆம் பக்கம் பார்க்க)

## ரணில்–சொல்ஹெய்ம் நேற்று சந்திப்பு

(ஒஸ்லோ)

நோர்வேக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சர்வதேச அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சர் எரிக் சொல்ஹெய்மை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்க கன்சவேட்டிவ் கட்சியினரையும் மற்றும் சர்வதேச ஜனநாயக (18ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவுக்குச்சென்ற கே.பிக்கு 'சல்யூட்' அடித்த இராணுவ அதிகாரி

### வடக்கின் முதலமைச்சர் எனவும் அறிமுகம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முனியன் ...டு குளத்திற்கு அருகில் இடம்பெற்ற வைப...ம் ஒன்றில் கலந்து கொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பான கே.பி.என்ற குமரன் பத்மநாதனுக்கு இராணுவத்தினர் சல்யூட் அடித்து, வரவேற்பளித்துள்ளனர்.

புதுமாத்தளன் பிரதேசத்திலுள்ள இராணுவ உயர் அதிகாரியொருவரும் கே.பிக்கு இவ்வாறான வரவேற்பை அளித்துள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புதுமாத்தளன் பிரதேசத்திற்கு 200க்கும் மேற்பட்ட முக்கியஸ்தர்கள் செல்ல உள்ளதாகவும் இவர்களுக்கு (18ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர் பிரபாகரன் இணையத்தில் தோன்றுகிறார்

### வதந்தியால் தமிழகத்தில் பரபரப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று இந்தியாவின் தமிழக மாநிலம் எங்கும் நேற்று திடீர் பரபரப்பு ஒன்று ஏற்பட்டது.

பிரபாகரன் உயிருடன் காட்டுப்பகுதி ஒன்றில் நடமாடும் நேரடி வீடியோ காட்சிகள் (18ஆம் பக்கம் பார்க்க)



## பெண் புலி உறுப்பினர்கள் சகலரும் இன்று விடுதலை



### அமைச்சர் டியூ நேற்று தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிப்போரின்போது படையினரிடம்சரணடைந்த விடுதலைப் புலிகளின் அனைத்து பெண் உறுப்பினர்களும் இன்றுடன் முழுமையாக விடுதலை செய்யப்படுவர் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

நேற்று தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலையத்தில் வைத்து 23 பெண் புலி உறுப்பினர்களை பெற்றோரிடம் கையளித்தபின் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (18ஆம் பக்கம் பார்க்க)

## தயாசிறி ஜயசேகரவுக்கு பொன்சேகா உபசரிப்பு

(கொழும்பு)

வெலிக்கடை சிறையிலுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று வெள்ளிக்கிழமை தன்னைப் பார்வையிட வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவுக்கு தேநீர் வழங்கி உபசரித்துள்ளார்.

வெலிக்கடை சிறையிலுள்ள சரத் பொன்சேகாவுக்கு மின்சார கேத்தல் ஒன்று வழங்கப்பட்ட நிலையில், சரத் பொன்சேகா தேநீர் தயாரித்து தயாசிறி ஜயசேகரவுக்கு வழங்கியுள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் ஆயுதப் போராட்டத்தை முஸ்லிம் காங்கிரஸே தடுத்து நிறுத்தியது

### ரவூப் ஹக்கீம் விளக்கம்

(கொழும்பு)

ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடவிருந்த முஸ்லிம் இளைஞர்களை சமூக நீரோட்டத்துக்கு கொண்டுவருவதற்காகவே தமது கட்சி உருவாக்கப்பட்டதென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்தின் பிரித்தானிய கிளை தூதுக் குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யுத்த காலத்தில் ஒரு வகையான பங்கு வகித்ததாகவும் யுத்தத்திற்கு (18ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து எந்தக் கட்சியுடனும் பேசத்தயார்

### இரா.சம்பந்தன் அறிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு மற்றும் அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக எந்தக்கட்சியுடனும் பேச்சுவார்த்தை மேற்கொள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தயார் என அக்கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு மற்றும் அவர்களது பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு தமிழ்க் கட்சிகளின் அரங்கம் (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மன்னிப்பு கேட்க முடியாது! அமைச்சர் முரளிதரன் திட்டவட்டம்

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டளவில் கிழக்கில் படுகொலை செய்யப்பட்ட 600 பொ லிஸ் உத்தியோகத்தர்களின் படுகொலை தொடர்பில் தான் மன்னிப்புக் கேட்க முடியாதென்று மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

குறித்த படுகொலைகளை புலிகளின் உளவுப் பிரிவுப் பொறுப்பாளர் பொட்டு அம்மானுடைய உத்தரவின் பேரில் நியூட்டன் என்பவரே மேற்கொண்டதாகத் தெரிவித்துள்ள அவர், அந்தக் கொலைகளுக்கும் தனக்கும் எதுவித தொடர்பு மில்லாத நிலையில் தான் மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை யென்று கூறுகின்றார்.

குறித்த காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் புலிகளின் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருந்தவர் கருணா என்பதுடன் அந்தக் கொலைகளுக்கான பொறுப்பும் அவருடையது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் குற்றம் சாட்டியிருந்தார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் முன் சாட்சியமளிக்கையிலேயே முதலமைச்சர் சந்திரகாந்தன் அவ்வாறு குற்றம் சாட்டியிருந்தார்.

அத்துடன் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கொலை தொடர்பில் அமைச்சர் முரளிதரன் பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

(ச-5)


## வெற்றிக்கு ஆன்மிகம் அவசியம்

அன்புடையீர்!

அழுத்தங்கள் மேலோங்கி மனது சஞ்சலமடைந்து நிச்சியமற்ற காலத்தை எதிர்நோக்கும் அன்பர்களுக்கு எமது அன்பான அழைப்பு

சத்தியசாயி நிலையத்தில் உங்களுடன் ஓர் இனிய சந்திப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (24.10.2010) காலை 9.30 மணியளவில் வரவுப்பதிவுடன் ஆரம்பமாகி 10.00 மணிக்கு இறைவணக்கத்துடன் ஆரம்பமாகும்.

விசேட நிகழ்வுகள்

வெற்றிக்கு நம்பிக்கை அவசியம்
(வைத்திய கலாநிதி இ.கணேசமூர்த்தி)

நாடகம் - பரீட்சைக்கு நேரமாச்சு
(நிலைய இளைஞர் அணி)

இறை அனுபவம்
(வைத்திய கலாநிதி சி.சிவகோணேசன்)

அன்பர்களுடன் கலந்துரையாடல்
(சந்தேகங்கள் தீர்த்தல்)

நிகழ்வுகள் சிற்றுண்டியுடன் நண்பகல் முடிவடையும். அன்பான அழைப்பை ஏற்று நம்பிக்கையை பெருக்குங்கள்.

ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம்
(பல்கலைக்கழகம் முன்பாக)
166/5, சேர் பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி
T.P - 021 222 9476

(சி/1450)


# பாணந்துறை முதல் கல்கிசை வரை நேற்று பாரிய தேடுதல் நடவடிக்கை

(கொழும்பு)

பாணந்துறை முதல் கல்கிசை வரையான பகுதியில் நேற்று அதிகாலை 3 மணிமுதல் 10 மணி வரை பாரிய தேடுதல் நடவடிக்கை யொன்று மேற்கொள்ளப்பட்டது. சுமார் ஆயிரத்து 300 பொலி சார் இத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இத் தேடுதலின் போது ஆயிரத்து 700 வீடுகள் சோதனைக்குள்ளாக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. போதைப் பொருட்களை ஒழிக்கும் நடவடிக்கையின் புதிய முயற்சியாக இத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

கஞ்சா, ஹெரோயின், பாபுல் மற்றும் பல சட்ட விரோத போதைப் பொருட்கள் இச் சோதனையின் போது கைப்பற்றப்பட்டதுடன் 16 சந்தேகநபர்களும் வெடிபொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரொயின் விற்பனை மூலம் திரட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பெருந்தொகைப் பணத்துடன் ஹெரோயின் விற்பனையாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ச-5)

# மார்க்கறெற் பஸ்ரினின் இசைக்கச்சேரி

திருமறைக்கலாமன்றம் நடத்தும் முத்தமிழ் சங்கம நிகழ்வில் இன்று சிறப்பு நிகழ்வாக திருச்சிராப்பள்ளி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி கலாநிதி மார்க்க றெற்பஸ்ரினின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

இசைத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற இவர் தமிழகத்தில் தனது குரல் வளத்தால் புகழ் சேர்த்தவர். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியற் கல்லூரி நடத்திய வளாகம் கடந்த பரத நாட்டிய பட்டப்படிப்பினில் முது நுண் கலைமாணிப் பட்டம் பெற்றோருக்கான சான்றிதழ்களை வழங்க வருகை தந்த இவர், இன்று இவ் இசைக் கச்சேரியை நடத்துவது குறிப்பிடத்தக்கது.

இக் கச்சேரியுடன் பல்வேறு நடன நிகழ்வுகளும் திருமறைக்கலாமன்ற கலைஞர்களின் சகுந்தலை இசை நாடகமும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.


## விற்பனை முகவர்கள் தேவை

பல்பொருள் விற்பனைத் தாபனத்துக்கு விற்பனை முகவர்கள் 5 பேர் தேவை. அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

நியூ ஸ்ரீ திருப்பதி றேடர்ஸ்
151, கே.கே.எஸ் வீதி,
சத்திரச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P :- 0773366482

(சி/1449)

## செல்லா சினிமா

மம்முட்டி அர்ஜின் சினேகா மற்றும் பலர் நடிப்பில்




காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00


## தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777

(சி/1384)


# மரண அறிவித்தல்



## அருணாசலம் சோமசுந்தரம்

(சங்கீதபூஷணம்,கலாபூஷணம்,பண்ணிசை மணி,இசையரசு ,பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் -முன்னாள் இளைப்பாறிய ஆசிரியர் ,யா/வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம்,யா/இடைக்காடு மகாவித்தியாலயம், யா/கனகரத்தினம் மகாவித்தியாலயம்)

சரசாலை மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும், தற்போது 365,கோவில் வீதி நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சோமசுந்தரம் அவர்கள் (20.10.2010) புதன்கிழமை அதிகாலை 4.15க்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் தங்கம்மாவின் மகனும் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற அன்னபூரணம் (இளைப்பாறிய ஆசிரியை, யாழ்.கனகரத்தினம் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், யோகராணி (Chemist -அவுஸ்திரேலியா), யோகதாசன் (கணக்காய்வாளர்), யோகேஸ்வரி (முதல்வர், யாழ்.மாநகரசபை), யோகானந்தன்(பொறியியலாளர் -ஹொலண்ட்),யோகசெல்வம் (கணக்காளர்-கனடா),யோகநாதன் (தொழிலதிபர்-தனலக்ஷ்மி ஸ்ரோர்,கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீஸ்கந்தராஜா, சாவித்திரிதேவி (உப அதிபர், அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்),பற்குணராசா (செயலாளர், யாழ். மாநகர சபை முதல்வர் அலுவலகம்), அற்புதி(லண்டன்), அருணாசல முதலியார் (கனடா),தனலக்ஷ்மி(Col) ஆகியோரின் அன்பு மாமனாரும், வனஜா, சஞ்சீவராஜா,யோகவிநாயகன்,கார்த்திகா,உபேந்திரா,சுபேந்திரா, கஜனி, சங்கீதா, கஜானன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 365 கோவில்வீதி நல்லூரில் ஞாயிறு காலை 10.00 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்,அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.365, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(2720)

# இன்று ஒரு தகவல்

## இயற்கையின் கணக்கு

“எதுவும் நம்முடைய கையில் இல்லை” என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களும் உண்டு.

“எல்லாமே நம்முடைய கையில் தான் இருக்கிறது. மனிதனால் முடியாதது எதுவுமேயில்லை” என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களும் உண்டு.

ஆனால் உண்மை என்ன தெரியுமா?

இந்தப் பிரபஞ்சத்தில் நம்மை மீறிய சக்தியும் கிடையாது. நமக்குக் கட்டுப் பட்டிருக்கும் சக்தியும் கிடையாது. இந்தப் பிரபஞ்சமே ஒரு சக்தி. அதில் நாமெல்லாம் ஒரு பகுதி.

நாமே சக்தியின் ஓர் அங்கமாக இருக்கும் போது, அது நம்மை ‘மீறு கீறது’ என்று சொல்வதும் ‘கட்டுப்படுகிறது’ என்று சொல்வதும் தவறு.

ஆனால் மனிதன் என்ன நினைக்கிறான் என்றால்...

அவனுடைய விருப்பத்துக்கு மாறாக நடப்பதையெல்லாம் தன்னை மீறிய சக்தியாக எண்ணுகின்றான்.

எண்ணியபடி நடந்து விட்டால், அது தனக்குக் கட்டுப்பட்ட சக்தி என்று நினைக்கிறான் அதுதான் விடயம்.

மனம் இருக்கிறதே... அது செய்யும் மாயம் இது. ஆனால் அறிவு பூர்வமாக சிந்தித்து ஒரு விடயத்தை நம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். இயற்கை எப்படி இருக்குமோ அப்படித் தான் இருக்கும்.

இயற்கையின் நடைமுறை நமக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக அது நம்மை மீறி நடக்கிறது என்று நினைக்கக் கூடாது. உதாரணத்துக்கு, மரணத்தை மனிதன் விரும்புவதில்லை. அதனால் அது தன்னை மீறி நடக்கும் ஒரு விடயமாக நினைக்கிறான். பிறப்பு ஒரு தொடக்கமெனில், இறப்பு ஒரு முடிவு என்றே சாதாரண மனிதர்கள் நினைக்கிறார்கள்.

இறப்பதும் பிறப்பதும் – தூங்கி விழிப்பது மாதிரி என்கிறார் வள்ளுவர். இயற்கையின் நடைமுறை உயிர்களின் விருப்பத்துக்கு எல்லாம் வளைந்து கொடுக்காது என்பதை விளக்குவதற்கு ஒரு கதை சொல்கிறேன் கேளுங்கள்.

ஒரு தடவை எமதர்மராஜா இந்த பூலோகத்திற்கு வந்தாராம். ஒரு கல்யாணம் நடந்து கொண்டிருந்த வீட்டிற்குள் நுழைந்தார். யாரைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறாரோ தெரியவில்லை.

அந்த கல்யாணவீட்டு வாசலில் கதவோரமாக ஒரு எலி நின்று கொண்டிருந்தது. எமன் அதைப் பார்த்தார்.

“நீ இங்கேயா இருக்கிறாய்?” என்று ஆச்சரியமாக கேட்டார். கேட்டுவிட்டு அவர் பாட்டுக்கு உள்ளே போய்விட்டார்.

எலி யோசித்துப் பார்த்தது. “எமன் நம்மைப் பார்த்து, “நீ இங்கேயா இருக்கிறாய்?” என்று ஆச்சரியமாகக் கேட்டுவிட்டுப் போகிறாரே!

அப்படியானால் “நான் இந்நேரம் எமலோகத்தில் இருக்க வேண்டிய ஆளா?” என்று நினைத்தது.

அதற்கு மரண பயம் வந்துவிட்டது. உடனே அழ ஆரம்பித்துவிட்டது. வெளியே வந்து ஒரு மரத்தடியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தது.

அந்த நேரம் பார்த்து ஒரு பருந்து வந்தது. எலியைப் பார்த்துவிட்டு அதனருகில் சென்றது.

“ஏன் அழுகிறாய்?” என்று கேட்டது.

எலி விடயத்தைக் கூறியது. எமன் இப்படிக் கேட்டுவிட்டுப் போகிறார் என்று கூறியது.

பருந்து சிரித்தது. “கவலைப்படாதே உனக்கு ஏதாவது கெடுதல் வரும் என்றால் அது என்னால் தான் வரவேண்டும். நான் இப்பொழுதே உனக்கு வாக்குறுதி தருகிறேன். எந்தத் தீங்கும் செய்ய மாட்டேன். தைரியமாக இரு” என்றது.

“இருந்தாலும் எமன் திரும்பி வரும் போது என்னைத் தூக்கிக் கொண்டு போனால் என்ன செய்வது?” என்று யோசித்தது எலி.

அதற்கும் “ஒருவழி இருக்கிறது. நீ உடனே என்னுடன் புறப்படு. நான் உன்னைத் தூக்கிக் கொண்டு போய் பத்திரமாக ஓரிடத்தில் விட்டு விடுகிறேன்” என்றது பருந்து.

எலி புறப்பட்டது.

பருந்து அதைத் தூக்கிக் கெண்டுபோய் ஒரு மலையுச்சியில் பாறைக்குப் பின்புறமாகவுள்ள பொந்தில் விட்டுவிட்டு அந்தக் கல்யாண வீட்டுக்கு வந்து சேர்ந்தது.

அந்தச் சமயத்தில் எமன் வெளியில் வந்து கொண்டிருந்தார்.

கதவோரமாக அந்த எலியைத் தேடினார். காணவில்லை. அப்பொழுது அந்த பருந்து சிரித்துக் கொண்டு அருகில் வந்து விடயத்தைக் கூறியது.

“நான் தான் எலியைப் பத்திரமாக கொண்டுபோய் மலையுச்சியில் பாறை மறைவில் வைத்திருக்கிறேன்” என்றது. இதைக் கேட்டதும் ‘அப்பாடா’ என்று பெருமுச்சு விட்டார் எமன்.

அதன் பின் சொன்னார்.

‘அது தானே பார்த்தேன்.’ இன்றைக்கு இந்த நேரத்தில் அந்த எலிக்கு மலையுச்சியில் பாறையின் மறைவில் இருக்கும் ஒரு பூனையால் மரணம் ஏற்பட வேண்டும் என்று இருக்கிறது. அப்படியிருக்கும் போது அந்த எலி இங்கே நின்று கொண்டிருக்கிறதே என்று பார்த்தேன்.

அதுதான் ‘நீ இங்கேயா இருக்கிறாய்?’ என்று கேட்டேன். இந்நேரம் அங்கே ‘கதை முடிந்திருக்கும்’ என்றார் எம தர்மராஜா. இது தான் அந்தக் கதை. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் இயற்கையில் கணக்கு எப்பொழுதும் சரியாகவே முடியும் என்பதுதான்.

ஒரு பெரிய வீட்டிற்குள்ளிருந்து ஒரு நத்தை வெளியே வரப்புறப்பட்டது. அறையிலிருந்து வெளியே வர 3 நாட்கள் ஆகியது. மாடிப்படி இறங்க 2 நாளாகியது. முன் வராந்தாவை கடந்துவர 2 நாட்களும் தோட்டத்தை கடந்து வீதிக்கு வர 5நாட்களும் ஆகிவிட்டது. வீதிக்கு வந்தவுடன் அந்த வீடு இடிந்து விழுந்தது.

“அப்பாடா! நேரத்தோடு கிளம்பியதால் ‘தப்பித்தேன்’ என்று பெருமூச்சுவிட்டதாம் நத்தை. இது எப்படி இருகிறது?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். சிறைச்சாலை கைதிகள் அடிப்படை வசதியின்றி அவதி

## அமைச்சர் டியூ குணசேகரவிடம் முறைப்பாடு

யாழ். சிறைச்சாலையில் கைதிகள் அடிப்படை வசதிகள் இன்றி அவதிப்படுவதாகவும் இவை தவிர இங்கிருந்து தினந்தோறும் இவர்கள் வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதற்கு போதி வாகனங்கள் இல்லாது உள்ளார்கள் என்றும் யாழ். சிறைச்சாலை பிரதான காவ லர் எஸ். இந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ். சிறைச்சாலையில் சிறைச்சாலை காவல்களுக்கு புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகராவிற்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று யாழ். சிறைச்சாலையில் இடம்பெற்றது.

இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ,

யாழ் . சிறைச்சாலையில் சிரேஷ்ட அலுவலகர்கள் பற்றாக்குறையால் நாம் சிரமப்படுகின்றோம். அதேவேளை சிறைச்சாலையிலிருந்து யாழ். மாவட்டத்தில் உள்ள 9 நீதிமன்றத்திற்கு’ கைதிகளை அழைத்து செல்வதற்கு எம்மிடம் இரண்டு வாகனங்கள் மட்டுமே உள்ளது அவையும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இவை தவிர சிறைச்சாலையில் கைதிகளை அடைத்து வைப்பதற்கு போதியளவு அறைகள் இல்லாமல் ஒரு அறையில் 30 க்கும் மேற்பட்ட கைதிகள் இருக்கின்றனர்.

இதனால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது. இங்கு அமைக்கப்பட்டுள்ள மலக்குழிகள் போதியளவு இல்லாமையால் வாரத்திற்கு ஒருமுறை இதனை துப்புரவு செய்யப் வேண்டியுள்ளது.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் டி.யூ குண சேகர யாழ். சிறைச்சாலை மிகவிரைவில் புனரமைக்கப்படும் என உறுதியளித்தார். (ஸ்ரீ-2-6)

# வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் ‘செந்தமிழ்’ முன்பள்ளி திறந்து வைப்பு

வடமராட்சி கிழக்கில் அண்மையில் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட உடுத்துறை கிராமத்தில் முதன் முதலாக செந்தமிழ் முன்பள்ளி ஒன்று திறந்து வைக்ககப்பட்டுள்ளது.

போரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் கடந்த 20 ஆம் திகதி காலை 10 மணிக்கு செந்தமிழ் விளையாட்டுக் கழக உறுப்பினர் சி. பாலசுந்தரம் தலைமையில் திறப்பு விழா நிகழ்வு இடம்பெற்றது.

முன்பள்ளி கட்டடத்தை ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் அக்கட்சியின் வடமராட்சி கிழக்கு மக்கள் தொடர்பாளர் இ.சதீஸ் மற்றும் அக்கிராம இராணுவத் தளபதி ஆகியோர் கூட்டாக கட்டடத்தை திறந்து வைக்க முன்பள்ளியின் பெயர்ப்பலகையினை மருதங்கேணி தலைமைப் பீட கிராம அலுவலர் எஸ்.ரவிக்குமார் திறந்து வைத்தார்.

முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் உபகரணத்தை சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கி வைத்தது இந்நிகழ்வில் அக்கிராம மக்கள், சமூக அமைப்பு பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-64)

# இராசி பலன்

*23.10.2010*
*(ஐப்பசி 6, சனிக்கிழமை)*
*பூரணை முற்பகல் 7.52 மணிவரை*
*அச்சுவினி முன்னிரவு 11.24 மணிவரை*
*இராகுகாலம்9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02-4.32 மணிவரை*
*திருமூலர் குருபூசை*

**மேடம்** ஆதாயத்தை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், பணியில் சிறு மன உழைச்சல் ஏற்படலாம், பெரியோர் சந்திப்புண்டு.

**இடபம்** பயணத்தால் பலன் கிடைக்கும், இடைக்கால நண்பர்களால் திடீர் விரயம் ஏற்படலாம், இட மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** எதிர்கால வெற்றிக்கு அடித்தளமிடும் நாள், பிறர் பாராட்டும் வகையிலான செயலொன்றைச் செய்வீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மைதரும்.

**கடகம்** தொட்ட காரியம் வெற்றி பெறும் நாள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**சிங்கம்** சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள், வருங்காலத்திற்கான திட்டமொன்றை தீட்டுவீர்கள், முன்கோபமும், அலைச்சலும் அகலும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை எடுக்க ஆட்படலாம், பயணங்களில் கவலை அவசியம், ஆரோக்கியத்தில் கூடிய அக்கறை எடுக்க வேண்டிய நாள்.

**துலாம்** சுற்றத்தார் வருகையுண்டு, தொகை எதிர்பார்த்தபடியே வந்து சேரும், வெளியூர் பயணத்தால் ஆதாயம் ஏற்படும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இன்று வழிபாட்டில் ஆர்வம் கூடும், பொருட்சேர்க்கையுண்டு, திருமண முயற்சி வெற்றி தரும்.

**தனுசு** பூமியால் இலாபம் கிடைக்கும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரும் நாள், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், புத்திரர் வழியில் நண்மையுண்டு.

**மகரம்** பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், வாகன சுகமுண்டு.

**கும்பம்** உறவினர் வழி நன்மையுண்டு, பிரிவினைகள் சுமுகமாக அமையும், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், குடும்ப பொறுப்பு கூடும்.

**மீனம்** பணவரவு திருப்தி தரும், புகழ் கூடும் நாள், தேகாரோக்கியம் சீராகும், தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சி வெற்றி பெறும், போசன சுகமுண்டு.

வளவன்

# நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் இறப்பர் செய்கை

இலங்கையில் முதல் தடவையாக கிழக்கு மாகாணத்தின் இறப்பர் பயிர் செய்கையின் பால் வெட்டும் பணிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் நடைபெறவுள்ளது.

இலங்கை இறப்பர் பயிர்செய்கையாளர்கள் நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அசோக நுங்கவெல இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தின் இறப்பர் பயிர் செய்கையை அபிவிருத்தி செய்ய விருப்பதாகவும் இதன் மூலம் இலங்கையின் இறப்பர் உற்பத்தியில் கணிசமான அபிவிருத்தியை காண முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 110 |
| தக்காளி | 100 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 |
| கோவா | 80 | 70 | 80 |
| கரட் | 100 | 80 | 70 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 80 | 60 | 50 |
| வாழைக்காய் | 50 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 110 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 90 |
| பாகற்காய் | 140 | 120 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 110 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 |
| பீற்றூட் | 50 | 30 | 40 |
| கறிமிளகாய் | 140 | 100 | 100 |
| முருங்கைக்காய் | 140 | 120 | 120 |
| போஞ்சி | 140 | 120 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 100 |
| கீரை – 1 பிடி | 30 | 25 | 35 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 35-50 | 40 |

# ஈழத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதியும் ஜெயலலிதாவும் ஒன்றுதான்!

## ஈழம் என் நெஞ்சில் ஆறாத, மாறாத காயம்

“ காலை எழுந்ததும் என் கண்கள் முதலில் தேடிப் பிடிப்பது உந்தன் முகமே” என்று பாடல் வரிகளில் பனியின் இதம்! “கண்ணகி மண்ணில் இருந்து ஒரு கருஞ் சாபம்” என்று இந்திய அரசைச் சாடும் கவிதையில் வெடிகுண்டு வீரியம்... நெருப்பும் மழையும் நிரம்பியவை தாமரையின் எழுத்துக்கள், கவிஞர், பாடலாசிரியர், பெண்ணியவாதி, மரணதண்டனையை ஒழிக்கக் கோரும் மனித உரிமைப் போராளி என இந்தத் தாமரைக்கு இதழ்கள் பல!

“எனக்கு இலக்கியம் எப்படி முக்கியமோ... அரசியல் அதைவிட முக்கியம்!” என்கிறார்.

**“சினிமா என்பதே ஆணாதிக்கம் நிறைந்த சூழல்தான். பெண்ணியம் பேசும் உங்களால், சுதந்திரமாக இயக்கமுடிகிறதா? பெண்ணாக நீங்கள் ஏதேனும் அவதிகளைச் சந்தித்தது உண்டா?”**

“திரைப்படத் துறை மட்டும்தான் ஆணாதிக்கம் நிறைந்ததா? அரசாங்கம், நிர்வாகம், பத்திரிகை, பொறியியல், மருத்துவம், விவசாயம் உள்ளிட்ட துறைகள் எல்லாம் ‘சரிநிகர் சமமாக’ இயங்குகின்றனவா? வீட்டுச் சமையல் அறையில் ஆரம்பித்து, விண்வெளிப் பயணம் வரை ஆணாதிக்கம் இல்லாத இடமே கிடையாது என்பதைப் புரிந்து கொண்டால், இந்த சிக்கலைச் சமாளிக்கலாம்.

“ஆண்கள் எல்லோரும் எதிரிகள். அவர்களை விலக்கிவிட்டு இயங்க வேண்டும்” என்ற வறட்டுப் பெண்ணியம் அல்ல என்னுடையது. “பெண்ணும் ஒரு மனித உயிரே” என்பதைப் புரிய வைத்து, ஆண்களை வென்றெடுப்பதில் (Winnig over) அடங்கி இருக்கிறது. வெற்றியின் சூட்சுமம்! எனக்கென்று வரையறைகள், நிலைப்பாடுகள் உண்டு. அவற்றில் சமரசம் செய்து கொள்வது கிடையாது.

எந்தத் துறையையும் விட திரைத் துறையில் எனக்கு அதிக மதிப்பும் மரியாதையும் கிடைக்கிறது. என்னுடைய புரிதலும் அணுகுமுறையும் முதன்மையான காரணங்கள் எனச் சொல்லலாம்!”

**“நளினியை விடுதலை செய்வது குறித்து நீங்கள் எடுத்த முயற்சிகள், உங்களுக்கு என்ன மாதிரியான அனுபவங்களைத் தந்தது?”**

“நளினி, ராஜீவ் கொலை வழக்கில் குற் றம் சாட்டப் பட்ட ஒருவரே தவிர, அவர் கொலையாளி அல்ல. நடக்கப் போகும் விபரீதத்தை திருப்பெரும்புதூர் சென்றடையும் வரை நளினி அறிந் திருக்கவில்லை என்பதை உச்ச நீதிமன்ற நீதிபதி தோமஸ் தன் தீர்ப்பிலேயே குறிப்பிட்டார். சந்தர்ப்ப



சூழ்நிலையில் குற்றவாளியாக்கப்பட்ட ஒரு பெண், அவர் இத்தனை ஆண்டுகள் சிரிய முறையில் சிறையில் கழித்த பின்னரும் விடுதலை செய்ய மறுப்பது, மனித உரிமை களுக்கு எதிரா னது என்ற அடிப்படையில் தான் நளினி விடுதலைக்கான் கையெழுத்து இயக்கம்' தொடங்கினோம். முதல்வரிடம் விண்ணப்பத்தைக் கைய ளித்தபோது, அவரும் நளினி விடுதலையே விரும்புவதாகக் கூறினார்.

பின்னர், நடந்தவற்றை நாடறியும்.

நளினி விடுதலையை மறுப்பதற்குப் பின்னணியில், மிகப் பெரிய அரசியல் இருப்பது புரிகிறது. இப்போதும் அரசிடம் நாங்கள் வேண்டுவது, மனித உரிமைகளின் பெயரால் நளினியை விடுதலை செய்யுங்கள் என்பதே!”


**“பொதுவாக, எல்லா சினிமாப் பாடலாசிரியர்களும் பாராட்டுக் கவிஞர்களாக மாறிவிட, நீங்கள் மட்டும் அரசுக்கு எதிராகத் தொடர்ந்து இயங்குவது எப்படி?”**

“அரசுக்கு எதிராக இயங்க வேண்டும் என்று எனக்கு ‘வேண்டுதல்’ ஒன்றும் இல்லை.' நான் மக்களில் ஒருத்தி. மக்களுக்கு எதிராக அரசு மாறும்போது, அரசுக்கு எதிராக நான் மாறுகிறேன். இந்த அரசு மட்டுமல்ல ; வேறு எந்த அரசு வந்தாலும் இதே நிலைப்பாடுதான்.

அரசு,தமிழினத்துக்கும் தமிழ் நாட்டின் உரிமைகளுக்கும் கேடு செய்யும்போது, எதிர்த்துக் குரல் கொடுக்கிறேன். அது ஒரு படைப்பாளியாக என்னுடைய கடமை. அதுவே தமிழினத்துக்கு நல்லது செய்தால் பாராட்டத் தயங்கமாட்டேன்.

தமிழ்நாட்டில் மரணதண்டனையை ஒழிக்கட்டும். பாராட்டுகிறேன் ; அனைவருக்கும் தமிழில் கல்வி கிடைக்கச் செய்யட்டும். பாராட்டுகிறேன். நளினி உள்ளிட்டோரை விடுதலை செய்யட்டும் பாராட்டுகிறேன். மதுவை ஒழிக்கட்டும் பாராட்டுகிறேன். ராஜபக்ஷ குடும்பத்தைப் போர்க்குற்றவாளிகள் என்று சட்டப் பேரவையில் தீர்மானம் இயற்றட்டும்... பாராட்டுப் பத்திரமே வாசித்துவிடுகிறேன்!”

**“ஈழப் பிரச்சினைக்காகப் போராடியவர்களில் ஒருவர் நீங்கள்.மே 18க்கு பின்னர், ‘இந்த எல்லாப் போராட்டங்களும் வீண்’என்ற அயர்ச்சி ஏற்பட்டதா?”**



“போரோடு முடிந் து விடவில்லை யே ஈழத்துக் கொடுமைகள். முள் வேலி முகாம் கொடுமைகள், சரண் அடைந்தவர் கள் சித்திரவதை, பாலியல்வதை, கொடூரக் கொலைகள்,தமிழர் நிலம் சிங்களமயமாக்கல் என்று இன்னமும் தொடர்கின்ற னவே.

புண் பட்டுக் கிடந்தால் வேலைக்கு ஆகாது என்று துள்ளி எழுந்து, இலங்கைப் புறக்கணிப்பு,போர்க்குற்றவாளிகளைக் கூண்டில்ஏற்றுவது தொடர்பாக முன்னிலும் அதிகமாகவே வேலை செய்கிறேன்.

ஈழம்... என் நெஞ்சில் ஆறாத, மாறாத காயம்!”

**“இன்றைய இந்திய காங்கிரஸ் அரசின் போக்கு குறித்து?”**

“இந்திய காங்கிரஸ் அரசு யாருக்காக எப்படி எல்லாம் செயல்படுகிறது, எப்படி பெருங் குழுமங்களுக்கு ஏவல் செய்கிறது என்பதை அருந்ததிராய் போன்ற எழுத்தாளர்கள் பிட்டுப் பிட்டு வைத்துள்ளார்கள்.

நான் புதிதாகச் சொல்ல வேண்டியது ஏதும் இல்லை. என்னைப் பொறுத் தவரை, இது தமிழினத்தைக் கருவறுக்கப் புறப்பட்ட அரசு. தமிழினம் வாழவேண்டும் எனில் தமிழ்



நாட்டில் இருந்து காங்கிரஸை அடியோடு ஒழித்தாக வேண்டும்.

தமிழ்நாட்டில் காங்கிரஸுக்கு ஒரு செல்வாக்கு இருக்கும் வரையில் தான், இரு பெரும் கழகங்களும் மாறி மாறி அதைத் தோளில் சுமக்கவும், அதற்காகத் தமிழனைக் காட்டிக் கொடுக் கவும் போட்டியிடும்.

தமிழர் நலன், தமிழ் நாட்டின் உரிமைகள் இவற்றை முன் நிறுத்தினால் மட்டுமே தமிழ் நாட்டில் அரசியல் செய்ய முடியும் என்ற நிலையைத் தோற்றுவிப்பது நம் கையில் உள்ளது. அதற்கு முதல் வேலை, காங்கிரஸை வேரோடும் வேரடி மண்ணோடும் பெயர்த்தெறிவது தான்.

நல்ல வாய்ப்பாக சட்டப் பேரவைத் தேர்தல் வருகிறது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் ஒரு தொகு தியில் கூட வெல்லக் கூடாது என்பதை மனதில் கொள்வோம்!”


**“ஈழப்பிரச்சினையில் கருணாநிதி - ஜெயலலிதா இருவரின் நிலைப்பாடு குறித்த உங்கள் கருத்து என்ன?”**

“ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்து, பிணக் குவியல்களின் மீது ஏறி வெறியாட்டம் போட்ட காங்கிரஸின் குருதிக் கறை படிந்த கையை இறுகப் பற்றி, அதை இழந்துவிடக் கூடாதெனத் துடிப்பவர் கருணாநிதி.



அந்தக் கையை எப்படியாவது கைப் பற்றத் துடிப்பவர் ஜெயலலிதா. ‘ஆமாண்டா, அப்படித்தான் செய்வேன், உன்னால முடிஞ்சதைப் பாரு' என்று தெனாவெட்டாகக் காட்டிக் கொடுப்பவர் ஒருவர்.

‘ஐயகோஎன் செய்வேன் , அழிகிறதே என் தமிழினமே!' என்று அழுதுகொண்டே காட்டிக் கொடுப்பவர் இன்னொருவர். இருவருக்கும் இடையே என்ன பெரிய வேறுபாடு? சாயலில் வேறுபட் டாலும் , சாரத்தில் இருவரும் ஒன்று தான்!”


தாமரை

**“ஈழப்போராட்டத்தின் தோல்வி (அ) பின்னடைவுக்கு எது அல்லது,யார் காரணம் என்று கருதுகிறீர்கள்?”**



“ ‘ சிங்கள அரசுக்கு ஆயுதம் கொடுத்து, ஆதரவு கொடுத்து, உலக நாடுகள் தலையிட்டுக் காப்பாற்றி விடாமல் தடுத்து, வேவு பார் த்து, வழிகாட் டிக் கூட்டுச் சதி செய்து, இனப் படுகொலைப் போரைப் பின்னால் இருந்து நடத்திய இந்திய அரசே முதற்பெரும் காரணம்! எப்பாடுபட்டேனும் இதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பைக் கை கழுவி விட்டு, கபட நாடகங்கள் நடத்தி, இனப் படுகொலைக்குத் துணை போன தமிழக அரசு, இரண்டாவது காரணம்!இதை வெளிச்சம் போட்டுக் காட்டி, வீதிக்கு வந்து போராடி இனப் படுகொலையைத் தடுக்காமல்,‘போர் என்றால் மக்கள் சாகத்தான் செய்வார்கள்’ என்று அருட்பெரும் பொன் மொழியை உதிர்த்துவிட்டு, உறங்கப் போய்விட்ட எதிர்க்கட்சித் தலைவி ஜெயலலிதா, மூன்றாவது காரணம்!

இந்த நாடகங்களை எல்லாம் ஒரு கட்டத்தில் அறிந்து கொண்ட பின்னர்,கொதித்தெழுந்து போராடித் தம் தொப்புள் கொடி உறவுகளைக் காப்பாற்றாமல் கையைப் பிசைந்து முகத்தைத் திருப்பிக் கொண்டதோடு முடித்துக் கொண்ட தமிழக மக்கள் நான்காவது காரணம்!.

**ஆனந்த விகடன்**





யா/தேவரையாளி இந்துக்கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு நேற்று பாடசாலை சின்னத்தம்பி கலையரங்கில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களை பாடசாலை அதிபர் மா.நவநீதமணி தலைமையில் மாணவிகள் பான்ட் வாத்தியத்துடன் அழைத்துவருவதையும் வெற்றிபெற்ற பாடசாலை மாணவி ஒருவருக்கு திருமதி சண்முகலிங்கன் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரவெட்டி செய்தியாளர்)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**பொலிஸ் பயிற்சிக் கல்லூரி**

நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் நடவடிக்கைகளை மேம் படுத்தும் நோக்கில் பொலிஸ் கல்லூரி யொன்றை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான பிரேரணையை பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்திருந்தார். பொலிஸாருக்கு இந்த உத்தேச பயிற்சிக் கல்லூரியில் சட்டம் - குற்றச் செயல்கள் - புலன் விசாரணை - மக்கள் தொடர்பு - நீதிமன்ற வைத்திய அறிக்கைகள் - தகவல் தொடர்பாடல் - மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.

சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்ற பின்னர் இந்த பொலிஸ் கல்லூரி இயங்கும்.

**பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி**

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை துரிதமாக வழங்குவதற்காக 150 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான பிரேரணையை பொருளாதார அபிவிருத்திய மைச்சர் பசில் ராஜபக்ஷ முன்வைத்திருந்தார்.

2010 முதல் 2013 ஆம் ஆண்டு வரை இத்திட்டம் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வீதிகள் அமைத்தல்- மின்சார விநியோகம் - சமூக அமைப்புக்களை மேம்படுத்தல் - நீதி மன்றங்களை புனரமைத்தல் என்பன மேற்கொள்ளப்படும்.

**வடக்கில் மீண்டும் தொழில் பேட்டை**

வடக்கில் மீள்குடியேற்றப்பட்டுள்ள தமிழ் மக்களின் நன்மை கருதி வடக்கில் அச்சுவேலி தொழில்பேட்டையை இந்திய அரசின் உதவியுடன் மீண்டும் உயிர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான பிரேரணையை பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்திருந்தார்.

1971 ஆம் ஆண்டு அச்சுவேலியில் ஆரம்பிக்கப்பட்ட 36 தொழிற்சாலைகள் யுத்தம் காரணமாக சிதைவுற்றன. இந்திய அரசாங்கம் வழங்கும் 174 மில்லியன் இந்திய ரூபாவுடன் இலங்கையின் சார்பில் 25 மில்லியன் ரூபா முதலீடு செய்து இந்த தொழிற்சாலைகள் மீண்டும் இயங்கச் செய்யப்படவுள்ளன.

**வாழ்வாதார மேம்பாடு**

தனியார் துறையினரின் ஒத்துழைப் புடன் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஐ.நா. யூனிடோ அமைப்பின் நிதியுதவியைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கான பிரேரணையை கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் முன்வைத்திருந்தார். இத்திட்டத்தின் மூலம் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் சிறுகைத் தொழில் அபிவிருத்தி - விவசாய அபிவிருத்தி -கிராம வருமானத்தை அதிகரிக்கும் திட்டங்கள் - மீன்பிடித்துறை அபிவிருத்தி என்பன மேற்கொள்ளப்படும். இத் திட்டங்களுக்காக 7.7 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியைப் பெற்றுக்கொள்ள வரைவில் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படும்.

**கொரிய நிறுவனம் நிதியுதவி**

கிளிநொச்சி மாவட்டத்தில் கிராமிய ஜீவனோபாயத்தை மேம்படுத்தவும் மக்கள் அமைப்புக்களை சீரமைக்கும் கொரிய நிறுவனமான கொயிக்காவின் நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவிக்ரம முன்வைத்திருந்தார்.

வருமானம் தரக்கூடிய நடவடிக்கைகளுக்காக பொதுமக்கள் அமைப்புக்களுக்கு உபகரணம் மற்றும் பயிற்சிகள் வழங்கப்படும்.

விவசாயம் நீர்ப்பாசனம் - கால்நடைகள் - ஆகிய துறைகளின் அபிவிருத்திக்கும் இத்திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்படும். இதற்காக கொரிய முகவர் நிலையம் 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கும்.

**படையினருக்காக காலணி உற்பத்தி**

பாதுகாப்புப் படையினருக்குத் தேவையான காலணிகளை இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய அரச - தனியார் இணைந்த புதிய நிறுவனம் ஒன்றை உருவாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆரம்ப கட்டமாக ஒரு வருடத்துக்கு ஒரு இலட்சம் காலணிகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக அரச தனியார் இணைந்த குழுவொன்றும் அமைக்கப்படும்.

**பற்சிகிச்சை நிலையங்கள் மேம்பாட்டுக்கு நிதி**

அரசாங்கப் பாடசாலைகளில் உள்ள பற்சிகிச்சை நிலையங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த 118 மில்லியன் ரூபாவைச் செலவிட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை கல்வியமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்திருந்தார்.

நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க பாடசாலைகளில் 473 பற்சிகிச்சை நிலையங்கள் உள்ளன. இவற்றின் மூலம் 6 இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் நன்மையடைகின்றனர்.

**பழைய தொழிற்சாலைகளுக்கு புத்துயிர்**

கந்தளாய் சீனி உற்பத்தித் தொழிற்சாலை, எம்பிலிப்பிட்டிய காகிதத் தொழிற்சாலை, இலங்கை பீங்கன் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை மீண்டும் இயக்குவதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் அரச தனியார் முதலீடுகளைப் பயன்படுத்தவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை அரச வள மற்றும் விவசாய அபிவிருத்தியமைச்சர் பி. தயாரத்ன முன்வைத்திருந்தார்.

இது தொடர்பில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அபிப்பிராயம் பெறப்படும்.

**பாதைகளை துரிதமாக அமைக்கும் திட்டம்**

நாடு முழுவதிலும் ஆயிரத்து 174 கிலோ மீற்றர் பாதைகளை துரிதமாக அமைக்கும் திட்டத்துக்கு சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை பெருந்தெருக்கள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்திருந்தார்.

சகல தேர்தல் தொகுதிகளையும் உள்ளடக்கும் வகையில் பிரதான பாதைகளை ஒன்றிணைக்கும் வகையில் இந்த வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் இத் திட்டத்துக்காக இவ் வருடத்தில் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களும் அடுத்த ஆண்டுக்காக 300 மில்லியன் அமெரிக்க டொலர்களும் செலவிடப்படும். (ஸ்ரீ-2)

# பாடசாலைகளிலுள்ள உணவகங்களில் பரிசோதனை மேற்கொள்ளத்திட்டம்

(கொழும்பு)


பாடசாலை உணவகங்களில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களைப் பரிசோதனை் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பிரதிச் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த உணவகங்களுக்குச் சுகாதார அமைச்சின் அதிகாரிகளை அனுப்பி இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய மாணவர்களின் உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் பாடசாலை உணவகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் பாடசாலை உணவகங்களில் உடனடி உணவுகள் மற்றும் செயற்கை உணவுகள் என்பவற்றை விற்பனை செய்வதை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.


அதற்கமைய பாடசாலை உணவகங்களில் பரிசோதனைநடவடிக்கை களை மேற்கொள்ள உள்ளதாகவும் பிரதி அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ)



சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களுக்கு புலம்பெயர் நலன் விரும்பிகளால் ஒரு தொகுதி காலணிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அதிபர் உரையாற்றுவதையும் ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படங்கள்:- சாவகச்சேரி நிருபர்)

Sale! Sale! Sale!
மாபெரும் மலிவு விற்பனை
தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க
11.10.2010 முதல் 05.11.2010 வரை
சகல விதமான துணிவகைகள் மற்றும் றெடிமேற் ஆடைகள் என்பனவற்றை விசேட கழிவு விலையில் மலிவாகப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
லைடன் புடைவை நிலையம்
இல.40, ஆஸ்பத்திரி வீதி,(பஸ்நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
(சீ-1382)
தொலை பேசி :- 021 222 2381





அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழா அண்மையில் கொழும்பு தமிழ்ச்சங்க. மண்டபத்தில் நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்த இந்தியா திருவாவடுதுறை ஆதீன 23 ஆவது குரு மகாசந்நிதானம்,யாழ். பல்கலைக் கழக இந்துநாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா. வேதநாதன், அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி விருது விழங்கி கௌரவிப்பதையும் அருகில் நல்லை ஆதீன முதல்வர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவோர் கட்டுப்பணம் செலுத்துதல் வேண்டும்

## சபையில் சட்டமூலம் சமர்ப்பிப்பு

உள்ளூராட்சி மன்றங்கள் விசேட ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல்கள் (திருத்தம்) சட்ட மூலங்கள் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. பாராளுமன்றம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணிக்குக் கூடியது.

சபை அமர்வின் ஆரம்ப நிகழ்வில் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரம் முடிவுற்றதும் சபை முதல்வரும் அமைச்சருமான நிமல் சிறிபால டி.சில்வா சபாநாயகரின் அனுமதியைப் பெற்று இச்சட்ட மூலங்களை சபையில் சமர்ப்பித்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் விசேட ஏற்பாடுகள் சட்ட மூலத்தின் படி மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் , நகர சபைகள் கட்டளை சட்டம் , 1987 ஆம் ஆண்டில் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் என்பன திருத்தப்படவிருக்கின்றன. இதேவேளை , உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலத்தின் கீழ் தேர்தல்கள் கட்டளைச் சட்டமும் திருத்தப்படவிருக்கின்றன.

இச்சட்டத் திருத்ததின் கீழ் தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்று அமைச்சரால் தாபிக்கப்படும். இக்குழு ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். அத்தோடு தேசிய குழுவுக்கு துணை புரியும் வகையில் அமைச்சர் மாவட்ட மட்ட எல்லை நிர்ணய குழுக்களை நியமிக்கவும் இடமளிக்கப்பட்டுள்ளது.

இத்திருத்ததின் கீழ் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவர் 20 ஆயிரம் ரூபா படியும் அரசியல் கட்சிகள் சார்பாக போட்டியிடும் அபேட்சகர் ஒருவர் ஐயாயிரம் ரூபா படியும் கட்டுப் பணம் செலுத்த வேண்டும்.

தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் அபேட்சகர்கள் கட்டுப்பணம் செலுத்துவதில்லை. சுயேட்சைக் குழு உறுப்பினர் ஒருவர் 250 ரூபா கட்டுப்பணம் செலுத்துகிறார்.

புதிய திருத்ததின் படி அளிக்கப்படும் வாக்குகளில் இருபதில் ஒரு பங்கைப் பெறாதவர்களின் கட்டுப்பணம் அரசுடமையாக்கப்படும்.

இத்திருத்ததின் படி உள்ளூராட்சி மன் றத் தேர்தல் விகிதாசார முறைப்படியும் தொகுதிவாரி அடிப்படையிலும் நடத்தப்படும். இத்திருத்தத்தின் படி அளிக்கப்படும் வாக்குகள் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றப் பிரதேசத்திலும் ஒரு இடத்திலும் அமைக்கப்படும் நிலையத்திலேயே எண்ணப்படும்.

(ஸ்ரீ-2)

# இலங்கை தொழிலதிபர் சென்னையில் கைது

முறையான ஆவணங்கள் இல்லாமல் இலங்கைக்குச் வர முயன்ற இலங்கை தொழிலதிபரை சென்னை பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கையைச் சேர்ந்த முகமது ஹாசன் (வயது 32) என்பவர் வெளிநாடுகளுக்கு துணி ஏற்றுமதி செய்யும் நிறுவனம் நடத்தி வருகிறார். இவர் நேபாள நாட்டில் இருந்து சென்னைக்கு வந்தார். பின்னர் சென்னையில் இருந்து இலங்கைக்கு செல்வதற்காக சென்னை விமான நிலையத்திற்கு வந்தார்.

இவர் வைத்திருந்த கடவுச்சீட்டில் உரிய முத்திரைகள் எதுவும் இல்லாததை குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து அவரை பொலிஸார் கைது செய்தனர். இது குறித்து மேலும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஸ்ரீ-2)

# நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகள் அடுத்த மாதம் யாழில்

(கொழும்பு)

கற்றுக் கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதியிலிருந்து 15 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் ஆணைக் குழுவின் அமர்வுகள் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கபடுகிறன்றது.

கொழும்பில் தற்போது நடைபெற்றுவரும் கற்றுக் கொண்ட பாடங்களும் அனுபவங்களும் தொடர்பான தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை அமர்வுகளில் அரசியல்வாதிகள், முன்னாள் அமைச்சர்கள், அரசஅதிகாரிகள், முன்னாள்அரசஉயர் அதிகாரிகள் , கல்விமான்கள், பொருளாதார நிபுணர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் சாட்சியமளித்து வருகின்றனர்.

மேலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அண்மையில் ஆணைக்குழுவின் அமர்வுகள் நடைபெற்றதுடன் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களும் சாட்சியமளித்துள்ளனர்.

இந்நிலையிலேயே யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் அமர்வுகள் நடைபெறவுள்ளன. இதேவேளை கொழும்பில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஆணைக் குழுவின் அமர்வுகளில் முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் கே.கணேஷ் சாட்சியமளிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

# மத்திய கிழக்கு நாடுகளில் நிர்க்கதியான பணியாளர்களுக்கு தற்காலிக கடவுச்சீட்டு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் நிர்க்கதி நிலைக்குள்ளாகி உள்ளவர்களுக்கு தற்காலிக கடவுச்சீட்டுக்களை வழங்கி அவர்களுக்கு உதவி வழங்க வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

வெளிநாடுகளில் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையைச் சேர்ந்த அநேக பணிப் பெண்கள் நிர்க்கதி நிலைக்குள்ளாகியுள்ளனர்.

எஜமானவர்களால் அநீதி இழைக்கப்பட்டவர்களும் முகவர்களால் கைவிடப்பட்டவர்களும் அல்லது தப்பி வர முடியாது அல்லல் படுவோர் எனப் பலதரப்பினர் உள்ளனர்.

இதற்கு முன்னர் இவ்வாறானவர்களுக்கு கடிதங்கள் மற்றும் ஆவணங்களை வழங்கியே அவர்கள் இங்கு வந்து சேர்ந்தனர். புதிய நடைமுறையின் படி தமது தற்காலிக கடவுச் சீட்டு மூலம் நாடு திரும்ப வழி பிறக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# 600 பொலிஸ் உத்தியோகத்தர்களின் படுகொலை சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை

## பிரதியமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த 1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் இடம்பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களின் படுகொலைச் சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என மீள் குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயக மூர்த்தி முரளி தரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் மட்டக்களப்பு மாவட்டத்தில் போராட்டங்கள் நடைபெற்றதாகவும் அந்தக் காலப்பகுதியில் தாம் யாழ்ப்பாணத்தில் இருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் படுகொலைச் சம்பவங்களுக்கும் தமக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்பு கிடையாது என்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் சுமத்திய குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் இடம்பெற்ற காலத்தில் பொட்டு அம்மான், கரிகாலன் மற்றும் நியூட்டன் ஆகியோர் கிழக்குப் பிராந்தியத்தை வழி நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

30 ஆண்டுகளாக தொடர்ந்த யுத்தத்தினால் ஏற்பட்ட பேரவலங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே பொறுப்பேற்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த கால விடயங்களை கிளறுவதனை விடவும் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமானதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# பொதுக்கூட்டம்

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான ஆண்டுப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறும்.

அன்றைய தினம் புதிய நிர்வாகத் தெரிவும் பாடசாலையின் எதிர்காலச் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாட இருப்பதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் பி.கே.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



அகில இன நல்லுறவு ஒன்றிய விருது வழங்கும் விழாவில் கலைமணி சு. தெய்வேந்திரத்துக்கு *சாம ஸ்ரீ தேச கீர்த்தி* விருதினை அமைப்பு அதிதிகள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.






நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் ஆசிரியர் தினவிழா கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ்.மாநகர முதல்வரும், அவரின் செயலாளருமான திரு.திருமதி.பற்குணராஜா ஆகியோர் வரவேற்று அழைத்து வரப்படுவதையும் யாழ்.மாநகர சபை முதல்வரின் செயலாளர் மங்கல விளக்கேற்றுவதையும் ஆசிரியர் ஒருவர் கௌரவிக்கப்படுவதையும் கலந்துகொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## விளையாட்டு விழாவும் கௌரவிப்பு விழாவும்

நவிண்டில் கலைமதி முன்பள்ளி விளையாட்டு விழாவும் மற்றும் மாணவர்கள், நிலைய ஆரம்ப கலை உறுப்பினர்கள் ஆகியோருக்கான கௌரவிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலைமதி விளையாட்டரங்கில் இலங்கை போக்குவரத்துச் சபையின் முன்னாள் பரிசோதகர் மு. நடேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேசசபை செயலாளர் வே. குலநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கரணவாய் வடமேற்கு கிராம அலுவலர் சி. பாரதிராஜ், கரணவாய் வடக்கு கிராம அலுவலர் ச. நாகதீபசோதி ரூபன், கலைமதி முன்பள்ளித் தலைவர் கி.பன்னீர்ச்செல்வம், சுகாதார உத்தியோகத்தர் வீ. துவாரகன், வலய முன்பள்ளி இணைப்பாளர் திருமதி. சுதாகினி தேவி சுரேஸ், கரணவாய் வடக்கு சமுர்த்தி உத்தியோகத்தர் தி. விக்னேஸ்வரசர்மா, அகில இலங்கை சைவநற்பணி மன்றச் செயலாளர் இ.நாகேந்திரராஜா மற்றும் சனசமூகங்களின் சமாசத் தலைவரும் ஆசிரியருமான கொ. குணசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வெ. சுப்பிரமணியம், யாழ்/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை அதிபர் ப. வெற்றிவேல், மற்றும் யாழ். கரணவாய் தாமோதர வித்தியாலய அதிபர் சி.குருகுலலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஸ்ரீ-2-106)

## பலாலி ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பலாலி ஆசிரிய கலாசாலையில் 2002/03 மற்றும் 2003/04 ஆகிய கல்வியாண்டில் பயிற்சிபெற்று, இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த ஆசிரிய மாணவர்களது பெறுபேற்றுச் சான்றிதழ்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் கிடைக்கப் பெற்றுள்ளது.

எனவே உரியவர்கள் இதனை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கலாசாலை அதிபர் ம.இக்னேசியஸ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## யுனிசெப் செயற்றிட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் செயற்றிட்டத்தின் கீழ் வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களம், யுனிசெப் உடன் இணைந்து தென்மராட்சிப் பகுதியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான சுய தொழிலுக்கான நிதி, தையல் இயந்திரம் மற்றும் துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஆர். ரகுநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் பாதுகாப்பு அலுவலர் திருமதி சர்மினி சதிஸ்சன், மாவட்ட உத்தியோகத்தர் ஏ.ஞானவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-29)




## விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சங்கானைக் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்களிடையிலான உதைபந்தாட்ட மற்றும் தாச்சிப்போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு,

**உதைபந்தாட்டப்போட்டி**

**12 வயதுப்பிரிவு**

அராலி சரஸ்வதி வித்தியாலயம், விக்ரோறியாக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி

**16 வயதுப்பிரிவு**

அராலி இந்துக்கல்லூரி,வட்டு. இந்துக் கல்லூரி, வட்டு. மத்திய கல்லூரி.

**18 வயதுப்பிரிவு**

வட்டு.மத்திய கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி,வட்டு.இந்துக்கல்லூரி

**தாச்சிப்போட்டி**

**ஆண்கள் பிரிவு**

சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம், பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம், சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம்.

**பெண்கள் பிரிவு**

சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தியாலயம், காட்டுப்புலம் அ.மி.த.க.பாடசாலை, பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்

மேற்படி போட்டிகள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எங்கரசு, சங்கானை விளையாட்டுத்துறை செயலர் ரி.தர்மதேவன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்றது. (ஸ்ரீ

## க.பொ.த (சா/த) மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புக்கள்

யாழ்.மேலதிக மாகாண கல்வித் திணைக்களமும் யாழ்ப்பாண இராணுவத் தலைமைப் பீடமும் இணைந்து க.பொ.த சாதாரண தர மீட்டல் வகுப்புக்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 13,14 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடாத்த திட்டமிட்டுள்ளனர்.

இதில் கணிதம், விஞ்ஞானம் ,வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடங்கள் நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் க.பொ.த (சா/த) வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களை பங்குபற்றச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இச்செயலமர்வில் பங்குபற்றும் மாணவர்களின் பெயர்ப்பட்டியலை நாளை மறுதினத்திற்கு முன்னர் யாழ்.மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

## கலந்துரையாடல்

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை பிரதேசத்திற்காக தயாரிக்கப்பட்ட சமூக மூல வளத் திரட்டில் துறைசார்ந்த அத்தியாயங்களில் திருத்தப்பட வேண்டியதும் சேர்க்கப்பட வேண்டியதுமான விடயங்களையும் மற்றும் எதிர்கால அபிவிருத்தி நோக்கிய ஆலோசனைகள், கருத்துக்கள் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள அனைத்து திணைக்கள தலைவர்களையும் விளையாட்டு கழகங்களின் தலைவர்களையும் கடற்தொழில் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களையும் ஏனைய பொதுசேவையில் ஈடுபட்டுள்ள நலன் விரும்பிகளையும் பங்குபற்றுமாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார். (ஸ்ரீ-19)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயத்தில் தொண்டர் ஆசிரியர்களாக இருந்து ஆசிரிய உதவியாளர் களாக நியமனம் செய்யப்பட்டு பயிற்றப்படாமல் ஆரம்பக் கல்வித் தரங்க ளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விரைவு பயிற்சி செயலமர்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளை மறுதினம் தொடக்கம் எதிர்வரும்29 ஆம் திகதி வரை புலோலி மெ.மி.த.க.பாடசாலை மண்டபத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை செயலமர்வு நடைபெறும் என வடமராட்சி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## நூல் வெளியீட்டு விழா

(சுன்னாகம்)

தேசிய வாசிப்பு மாதம், உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நிகழ்ச்சித்தொடரின் கீழ் சுன்னாகம் சாமஸ்ரீ தேசகீர்த்தி, கலாபூஷணம் சு.துரைசிங்கம் எழுதிய ஐந்து சிறுவர் நூல்களின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2.30 மணிக்கு சுன்னாகம் பொது நூலகத்தில் வலி தெற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி சுலோச்சனா முருகநேசன் தலைமையில் நடைபெறும்.

வெளியீட்டுரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப -பீடாதிபதி பா.தனபாலன் நிகழ்த்த நூலின் முதற்பிரதியை ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் லயன் செல்லையா வைத்தியநாதன் பெறுவார். சிறுவர் கதை நூல்கள் பற்றிய மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் லலீசன் நிகழ்த்த ,சிறுவர் பாடல்நூல்கள் பற்றிய மதிப்பீட்டினை யாழ்/மகாஜனாக்கல்லூரி ஆசிரியர் திருமதி பகீரதி கணேசதுரை மாணவர்களுக்கு கௌரவப் பிரதிகளை வழங்குவார்.பதிலுரையை கலாபூஷணம் சு.துரைசிங்கம் ஆற்றுவார்.

மேலும் இந்நிகழ்வில் சிறுவர் இலக்கியம் பற்றிய கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2-54)

## வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரியில் பல்வேறு நிகழ்வுகள்

(சாவகச்சேரி)

யாழ். விழிப்புலனற்றோர் கூட்டுறவுச் சங்கமும் சாவகச்சேரி லயன்ஸ் கழகமும் இணைந்து சாவகச்சேரியில் வெள்ளைப் பிரம்பு தினத்தை கடந்த சனிக்கிழமை கொண்டாடினர்.

நிகழ்வில் சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இருந்து விழிப்புலனற்றோர் மற்றும் பொது மக்கள் ஊர்வலமாக ஐங்கரன் மண்டபத்தை அடைந்தனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி றஞ்சனா கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கச்சாய் வினோபா முன்பள்ளி நிர்வாகத்தினர் விழிப்புலனற்றோருக்கு உடைகளை வழங்கியதுடன் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட விழிப்புலனற்ற மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

வினோபா முன்பள்ளிக் காப்பாளர் த.சோதிநாதன் , சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் தி.முருகதாசன் , சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத் தலைவர் வ.சிறீபிரகாஷ் ஆகியோர் உட்பட பொது மக்களும் விழிப்புலனற்றோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் யாழ்.விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்களின் இசை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஸ்ரீ-29)

# அரசியல்வாதிகள், அரசஅதிகாரிகளிடையே சிந்தனை மாற்றம் ஏற்பட வேண்டும்

## ஜனாதிபதி வலியுறுத்து



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்திக்கான இலக்கை வெற்றி கொள்வதற்கு மக்களின் சேவகர்களாக அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் மாறுவதுடன்அதற்கான சிந்தனை மாற்றம் அவர்களிடம் பிறக்க வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமூக ரீதியான மாற்றமொன்றிற்காக சகல தரப்பினரினதும் அர்ப்பணிப்பு அவசியமெனத் தெரிவித்த ஜனாதிபதி ஆசியாவின் உன்னத நாடாக இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு அது உறுதுணையாகும் எனவும் குறிப்பிட்டார்.

பொருளாதார அபிவிருத்தியுடன் உயர் பண்புள்ள சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதற்கு மக்களிடையே சிறந்த மனப்பான்மையை விருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் புதிய வேலைத்திட்டம் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவி னால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தியுடன் சமூக அபிவிருத்தியையும் கட்டியெழுப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நிகழ்வில் பிரதமர் டி.எம்.ஜயரட்ன அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் டி.எம்.ஜயரட்ன பிரதமர் செயலகத்தினூடாக ஆரம்பித்து வைத்துள்ள சிந்தனை மாற்றத்திற்கான இவ் வேலைத்திட்டத்தை பாராட்டுவதுடன் நாடளாவிய ரீதியில் இதனை முன்னெடுத்துச் செல்வதற்கான தலைமைத்துவத்தையும் அவரே வழங்குவதும் சிறப்பம்சமாகும்.

கொழும்பு நகரில் குப்பை கூழங்களை அழிக்க முடியுமா என்ற பிரச்சினைக்கு தற்போது தீர்வு ஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் நாம் கொண்டு சென்ற சிந்தனை மாற்றத்தின் காரணமாக மக்கள் தற்போது வீதிகளில் குப்பை கூழங்களைப் போடுவதில்லை. அவர்கள் தற்போது பழக்கப்பட்டு விட்டனர். நாட்டில் ஒழுக்கம் மற்றும் சட்டங்களை மதிக்காது செயற்பட இடமளிக்க முடியாது. சட்டம் சகலருக்கும் சமமானது. அதற்கான மதிப்பினை சகலரும் வழங்க வேண்டும்.

சமூக சிந்தனை மாற்றமொன்றை எம்மால் மேற்கொள்ள முடியும். முன்னர் அரச அதிகாரிகள் மக்களுக்கு அனுப்பும் கடிதத்தில் தம்மை மக்கள் சேவகராகவே இனங்காட்டி வந்தனர். இன்று அமைச்சர்களிடையோ அதிகாரிகளிடையோ அப் பழக்கம் இல்லாது அருகிவிட்டது.

12 இலட்சம் அரச ஊழியர்கள் மத்தியில் சிந்தனை மாற்றம் ஏற்பட்டால் நாடு முன்னேறும். தற்போது முழு நாட்டிலும் அபிவிருத்திச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நாம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். தனிநபர் வருமானத்தை இரண்டு மடங்காக்க எம்மால் முடிந்துள்ளது.

அதனை மேலும் இரண்டு மடங்குகளாக்குவதே எமது இலக்கு. சமூக ரீதியான மாற்றம் தேவை. அதற்கு சகலரதும் அர்ப்பணிப்பு மிகவும் அவசியம். குடும்பம், பாடசாலை மட்டத்திலிருந்து இது ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் ஒரு மொழி ஆசிரியர்களுக்கு இரு மொழிக் கல்வி கணிதபாடம் தொடர்பான செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் காலை 8மணி தொடக்கம் 3.30 மணிவரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சமுகமளிக்கும் ஆசிரியர்களுக்கு ஆங்கிலத் திறன் தொகுதி I கையேடு வழங்கப்படும் என வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திரு.சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## சிறப்பு ஆய்வரங்கம்

யாழ்.மாவட்டத்தில் ''வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறை" எனும் கருப்பொருளில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி ஒரு மணிநேர ஆய்வுரை ஒன்றை இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு SOND நிறுவனத்தில் நடத்தவுள்ளார். அத்துடன் பங்குபற்றுநரின் கலந்துரையாடலும் இடம்பெறுவுள்ளது. இதில் ஆர்வலர்களை கலந்துகொண்டு தங்களது கருத்துக்களை பகிர்ந்துகொள்ளுமாறு நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வாழைச்சேனை பிரதேச சபையின் உப தலைவர் தடுத்து வைப்பு

(கொழும்பு)

வாழைச்சேனைப் பிரதேச சபையின் உப தலைவர் வடிவேல் ரவிச்சந்திரன் (புவி) குற்றப் புலனாய்வுத் துறையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அவரது மனைவி கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

கடந்த19ஆம் திகதி அவரது தனிப்பட்ட அலுவலகத்தில் கடமையிலிருந்த வேளை தனது கணவன் வாகனம் ஒன்றில் வந்த குற்றப்புலனாய்வுத் துறையினரால் பாதுகாப்பு உத்தியோகத்தார் சகிதம் அழைத்துச் செல்லப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் தனது கணவனின் பாதுகாப்பு உத்தியோகத்தர் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் இறக்கி விடப்பட்டிருந்ததாகவும் ரவிச்சந்திரன் செல்வேந்தினி கிழக்கு முதல்வரிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது கணவனை நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டு திரும்பியுள்ளதாகவும் அவர் என்ன காரணத்திற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதை தன்னால் அறிய முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஊடகவியலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அமைச்சர் ஹெகலிய மன்னிப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் மீது நடத்தப் பட்ட தாக்குதல்களுக்காக மன்னிப்புக் கோருவதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அண்மையில் உயர்கல்வி அமைச்சு வளாகத்தில் பல்கலைக்னகழக மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஐந்து ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையை காண்பித்த பின்னரும் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்திய பொலிஸார் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்கள் சட்டவிரோதமாக செயற்படும் வரையில் இவ்வாறான துரதிஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறுவதனை கட்டுப்படுத்த முடியாது என ஊடக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பல்கலைக்கழ்க மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட அசம்பாவிதத்தில் சில ஊடகவியலாளர்களும் தாக்குதலுக்குள்ளானமை தொடர்பில் நான் அறிக்கை கோரியுள்ளேன். ஜனாதிபதியும் அறிக்கை கோரியுள்ளார்.

அறிக்கை கிடைத்ததும் நான் தகவல் வெளியிடுகின்றேன் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இவ்வாறு கட்டுப்பாட்டை மீறிய வகையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்போது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய தேவை பொலிஸாருக்கு இருக்கின்றது. அந்த சந்தர்ப்பங்களில் சில எதிர்பாராத சம்பவங்கள் இடம்பெறலாம். ஆனால் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடம் ஜனாதிபதி அறிக்கை கோரியுள்ளார்.

நானும் அறிக்கை கோரியுள்ளேன். அதாவது மாணவர்கள் கட்டுப்பாட்டை மீறி அமைச்சு அலுவலகத்துக்குள் செல்ல முயற்சித்துள்ளனர். எனவே இந்த விடயத்தை ஒரு பக்கமாக பார்க்ககூடாது. சட்டத்தையும் ஒழுங்கையும் பொலிஸார் நிலைநாட்ட வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பில் பெற்றோர் கண்ணீர் வடிக்கின்றனர். தாங்கள் கஷ்டப்பட்டு பிள்ளைகளை உயர் கல்விக்காக பல்கலைக்கழகங்களுக்கு அனுப்புவது புரட்சி நடத்த அல்ல என்று குறிப்பிடுகின்றனர்.

ஆனால் அரசியல் ரீதியில் வீழ்ச்சி கண்டுள்ள ஒரு கட்சி மக்கள் செல்வாக்கை அதிகரிக்கும் நோக்கில் திட்டமிடப்பட்ட ரீதியில் இவ்வாறான முயற்சியில் ஈடுபட்டுவருகின்றது. இவ்வாறு இனவாத சக்திகளுக்கு இடமளிக்க முடியாது. இது விடயத்தில் அரசாங்கம் கவனமாகவே இருக்கின்றது என்று ரம்புக்வெல கூறினார். (ஸ்ரீ-2)

# சட்டவிரோதமான முறையில் கனடாவுக்கு ஆட்களை கொண்டு செல்பவர்களுக்கு 10 வருட சிறைத்தண்டனை

## கனேடிய நாடாளுமன்றில் புதிய சட்டமூலம்

(கொழும்பு)

சட்டவிரோதமாக குடியேற்றவாசிகளை கனடாவுக்கு கொண்டுவரும் நபர்களுக்கு தண்டனையளிக்கும் வகையிலான சட்ட மூலத்தை கனேடிய அரசாங்கம் நேற்று முன்தினம் அந் நாட்டு நாடாளுமன்ற பொதுச் சபையில் சமர்ப்பித்தது.

கனேடிய குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விக் டோவ்ஸ் ஆகியோர் இச்சட்ட மூலம் குறித்து வான் கூவரில் செய்தியாளர்களிடம் பேசினர்.

இந்த சட்ட மூலத்தின் படி 50 இற்கும் மேற்பட்டவர்களை சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டு வருபவர்களுக்கு குறைந்தபட்சம் 10 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

அத்துடன் சட்டவிரோத குடியேற்றவாசிகளும் ஒருவருட காலம் வரையான சிறைத்தண்டனையை எதிர்நோக்கலாம். அவர்களுக்கு சுகாதார நலன்புரி சேவைகள் குறைக்கப்படுவதுடன் நிரந்தர வதிவுரிமையும் நிராகரிக்கப்படலாம். அவர்களின் அகதி விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் 5 வருட காலம் வரை நிரந்தர வதிவுரிமைக்கு விண்ணப்பிக்க முடியாது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 490 இலங்கையர்கள் எம்.வி.சன். சி. கப்பல் மூலம் கனடாவை சென்றடைந்த பின் சட்டவிரோத குடியேறிகளைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி அரசாங்கம் தீர்மானித்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுமக்கள் பாதுகாப்பு விவகார அமைச்சர் விக் டோவ்ஸ் இந்த உத்தேச சட்டம் குறித்து கூறுகையில்,

கனடா ஒரு வரவேற்கும் நாடு ஆனால் எமது முறைகளை துஷ்பிரயோகம் செய்வதை மற்றும் மனிதக் கடத்தல்களை நாம் சகித்துக்கொள்ள மாட்டோம். எமது பிரஜைகளினதும் அகதிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே எமது நோக்கம் எனக் கூறியுள்ளார்.

ஆனால் இச்சட்ட மூலத்தை குறைகூறுவோர், இதன்மூலம் அகதிகள் குற்றவாளிகளைப் போன்று நடத்தப்படுவர். அத்துடன் இந்த உத்தேச சட்டம் கன்சர்வேட்டிவ் கட்சி அரசாங்கத்திற்கு அளவுக்கதிமான அதிகாரங்களை அளிக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் டேவிட் பூபாலப்பிள்ளை கருத்துத் தெரிவிக்கையில்,இப் புதிய விதிகள் நியாயமான அகதி அந்தஸ்துக் கோருபவர்களின் எந்தத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து தாம் கவலையடைவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வெளிநாடுகளில் பணிபுரியும் பலருக்கு உறுதி அளிக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படுவதில்லை

## தூதுவராலய தகவல்கள் சுட்டிக்காட்டு

வெளிநாடுகளில் தொழில்களில் ஈடுபட்டு வரும் பல இலங் கையர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட சம் பளம் வழங்கப்படுவதில்லை என தூதுவராலயத் தகவல்கள் தெரி விக்கின்றன.

அதிகளவு சம்பளங்களுடன் உயர் தொழில்களை வழங்குவதாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படும் பல இலங்கையர்கள் வெளிநாடுகளில் மிகக் குறைந்த சம்பளங்களுடன் சாதாரண வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டப் படுகிறது. வெளிநாடுகளில் இலங் கைத் தொழிலாளர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து பொலிஸ்மா அதிபருக்கு தூதுவர்கள் எழுத்து மூலம் அறிவித்துள் ளனர்.

கொழும்பு நீதிமன்றில் புலனாய் வுப் பிரிவினர் சமர்ப்பித்த அறிக்கை யொன்றில் இந்த விடயங்கள் தெரி விக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்று இவ்வாறான இன் னல்களை எதிர் நோக்கி வரும் நபர் களினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளுக்கு அமைய விசா ரணைகள் நடத்தப்படும் என்றும் இவ்வாறு போலியான வாக்குறு திகளை அளித்து வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பி வைக் கும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பிலான விசாரணைகள் ஏற் கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக புலனாய்வுப் பிரிவினர் அறிவித் துள்ளனர்.

சர்வதேச பொலிஸாரின் ஒத்து ழைப் புடன் விசாரணைகள் நடத்தப் படும் என தெரிவிக்கப்படுகிறது.

போலியான வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களின் ஊடாக மலேசியாவிற்கு சென்ற சில இலங் கையர்கள் அங்கு மலசல கூட சுத் திகரிப்பு பணிகளில் ஈடுபட்டு வருவ தாகவும் மிகவும் குறைந்த சம்பள த்தையே இவர்கள் பெற்றுக் கொள் வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை நடன நிகழ்ச்சிகளுக்காக சிங்கப்பூருக்கு அழைத் துச் செல்லப்பட்ட இளம் யுவதிகள் பாலியல் தொழில்களில் ஈடுபடுத் தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)

# பேராதனை விஞ்ஞானபீடம் காலவரையறையின்றி மூடல்

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை 4 மணி முதல் மறு அறிவித்தல் வரை காலவரையறையின்றி மூடப்பட் டுள்ளதாக பேராதனை பல்கலை க்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழ கத்துக்கள் பிரவேசித்த இனம் தெரி யாத நபர்களின் தாக்குதலால் பல்கலைக்கழக மாணவர்கள் பாதி க்கப்பட்டதன் பின்னர் அங்கு நில விய பதற்ற நிலை காரணமாகவே பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ள தாக பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

(ஸ்ரீ)

# நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் பிரசாரங்கள் முறியடிக்கப்படும்

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு அபகீர்த்தி ஏற் படுத்தும் நோக்கில்மேற்கொள்ளப் படும் பிரசாரங்கள் முறியடிக்கப் படும் என அரசாங்கப் பாதுகாப்பு பேச்சாளரும் ஊடக அமைச்சரு மான ஹெகலிய ரம்புக்வெல தெரி வித்துள்ளார்.

பிரிட்டனின் சனல் 4 ஊடகம் வெளியிட்ட வீடியோக் காட்சிகள் போலியானவை என்பது தொடர் பில் அரசாங்கம் முன்வைத்த கருத்துக்களுக்கு குறித்த ஊடகம் இதுவரையில் பதிலளிக்கவில்லை எனவும்,

இதேபோன்று மற்றுமொரு போலியான வீடியோக் காட்சிகளைப் பயன்படுத்தி நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற் சிகளும் முறியடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் சர்வதேச வலையமைப்பினர் போலியான வீடியோ காட்சி களின் மூலம் பிரச்சாரங்களை முன்னெடுக்க முயற்சித்து வருவதாக சிங் கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அவ்வாறான சேறுபூசும் முயற்சிகளுக்கு இலங்கை அரசாங்கம் இடமளிக்காது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




ஆசிரியர்களுக்கிடையே கணனி மென்பொருள் தயாரித்தல் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றிபெற்ற யா/ வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி குகநந்தினி கன கலிங்கத்திற்கு வடமராட்சி வலய விருது வழங்கும் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் பணப்பரிசினையும் சான்றிதழையும் வழங் குவதைப் படத்தில் காணலாம். (படம்:- அல்வாய் நிருபர்)





- கி.மு 4004 - அங்கிலிக்கப் பேராயர் ஜேம்ஸ் உச்சரின் கணிப்பின் படி அகிலம் படைக்கப்பட்டது.
- கி.மு 0042 - மார்க் அந்தோனி, ஆகுஸ்டஸ் ரோமப் பேரரசன் புரூட்டசின் இராணுவத்தை தோற்கடித்தனர். இறுதியில் புரூட்டஸ் தற்கொலை செய்து கொண்டான்.
- 0425 - மூன்றாம் வலன்டீனியன் ஆறாவது அகவையில் ரோமப் பேரரசன் ஆனான்
- 1157 - டென்மார்க்கில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. மன்னன் மூன்றாம் சுவெயின் கொல்லப்பட்டு முதலாம் வால்டிமார் அரசனானான்.
- 1707 - பெரிய பிரித்தானியாவின் முதல் நாடாளுமன்றம் கூடியது.
- 1870 - பிரான்சின் மெட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற இறுதிப் போரில் பிரஷ்யா வெளியடைந்தது.
- 1906 - அல்பேர்ட்டோ சாண்டோஸ்-டுமொண்ட் பாரிஸ் நகரில் ஐரோப்பாவின் முதலாவது காற்றை விடப் பாரமான வானூர்தியைப் பறக்க விட்டார்.
- 1911 - முதற்தடவையாக வானூர்தி ஒன்று போரில் பாவிக்கப்பட்டது: இத்தாலிய வானோடி லிபியாவில் இருந்து புறப்பட்டு துருக்கிய இராணுவ நிலைகளை அவதானித்தான்.
- 1912 - முதலாம் பால்க்கன் போர்: சேர்பியாவுக்கும் ஒட்டோமான் பேரரசுக்கும்இடையில் போர் ஆரம்பமானது.
- 1915 - நியூயோர்க் நகரில் 25ஆயிரம் தொடக்கம் 33 ஆயிரம் பெண்கள் வாக்குரிமை கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.
- 1941 - உக்ரேனின் ஒடேசா நகரில் 19ஆயிரம் யூதர் கள், ருமேனிய இராணுவ அதிகாரி நிக்க லாய் டெலியானு தலைமையில் ருமேனியா மற்றும் ஜெர்மன் படையினரால் உயிருடன் எரிக்கப்பட்டனர். அடுத்த நாள் மேலும் 10ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: மிகப்பெரும் கடற்படைப் போர் பிலிப்பைன்சில் ஆரம் பமாயிற்று.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத்தின் செம்படைகள் ஹங்கேரியை அடைந்தன.
- 1946 - ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் முதலாவது கூட்டத்தொடர் நியூயோர்க் நகரில் ஆரம்பமாயிற்று.
- 1956 - ஹங்கேரியப் புரட்சி, 1956: ஹங்கேரியில் பல்லாயிரக்கணக்கானோர் அரசுக்கு எதிராகவும் சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் போராட்டம் நடத்தினர். ஹங்கேரியப் புரட்சி நவம்பர் 4 இல் நசுக்கப்பட்டது.
- 1958 - நோவா ஸ்கோசியாவில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 174 நிலக்கரி சுரங்க தொழிலாளர்கள் சிக்கினர். இவர் களில் 100 பேர் மட்டும் நவம்பர் 1 வரை யில் மீட்கப்பட்டனர்.
- 1973 - சிரியாவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம்பெற்றயோம் கிப்பூர் போர் ஐ.நாவின் தலையீட்டை அடுத்து முடிவுக்கு வந்தது.
- 1983 - லெபனானில் பெய்ரூட் நகரில் அமெரிக்க கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 241 அமெரிக்கக் கடற் படையினர் கொல்லப்பட்டனர். அதே நாளில் இடம்பெற்ற மற்றொரு தாக்குத லில் பிரெஞ்சு இராணுவத்தினர் 58 பேர் கொல்லப்பட்டனர்.
- 1989 - கம்யூனிச ஹங்கேரியன் மக்கள் குடியரசு, ஹங்கேரியன் குடியரசு எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1991 - அநாதைகளான பெண் பிள்ளைகளின் மறுவாழ்வுக்காக செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1998 - இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டனியாகு மற்றும் பாலஸ்தீன தலைவர் யாசர் அரபாத்துக்கும் இடையில் "அமைதிக்காக நிலம்" என்ற உடன்பாடு எட்டப்பட்டது.
- 2001 - வட அயர்லாந்தில் இடம்பெற்ற அமைதிப் பேச்சுக்களின் பின்னர் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதக்களைவில் ஈடுபட் டது.
- 2001 - அப்பிள் நிறுவனத்தின் ஐப்பொட் வெளியிடப்பட்டது.
- 2001 - காஷ்மீர் விமானத் தளத்தைப் தகர்க்கும் தீவிரவாதிகளின் தற்கொலைப் படை முயற்சி முறியடிக்கப்பட்டது. 4 தீவிர வாதிகள் மற்றும் ஒரு இராணுவ வீரர் கொல்லபபட்டனர்.
- 2002 - மொஸ்கோவில் நாடக அரங்கு ஒன்றில் செச்னிய தீவிரவாதிகளினால் 700 பேர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட் டனர்.
- 2004 - பிரேசில் VSB-30 என்ற தனது முதலாவது விண்கப்பலை விண்ணுக்கு ஏவியது.
- 2004 - வடக்கு ஜப்பானில் நிலநடுக்கம் தாக்கியதில் 35 பேர் கொல்லப்பட்டு 2ஆயிரத்து200 பேர் படுகாயமடைந்தனர்.
- 2006 - இலங்கை சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் புரிந்துணர்வு ஒப் பந்தத்தில் கைச்சாத்திட்டன.

### பிறப்புகள்

- 1920 - ஃவுஜித்தா, ஜப்பானிய வானிலை அறிஞர் (இ. 1998)
- 1948 - எம்.எச்.எம் அஷ்ரப், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தாபகர் (இ. 2000)
- 1974 - அரவிந்த் அடிகா, இந்திய புதின எழுத் தாளர்

### இறப்புகள்

- கி.மு 42 - மார்க்கஸ் புரூட்டஸ், ரோமப் பேரரசின் படைத்தலைவன் (பி.கி.மு85)
- 1986 - எட்வேர்ட் அடெல்பேர்ட் டொய்சி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி.1893)




1917 - லெனின் (ரஷ்யா) அக்டோபர் புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்.

# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

12-IX




கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


**என்ன செய்யலாம்? எப்படி முகாமைத்துவப்படுத்தலாம்?**

அந்துரக்னோசு நோயை கட்டுப்படுத்துவதற்கு முன்பாக இந் நோயை வருமுன் காத்தல் செயன்முறைகளில் ஈடுபடுதல் நன்று.

எக்காரணம் கொண்டும் மிளகாய்ப்பயிர் சோர்வுறவிடக்கூடாது. பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கும் அதே வேளையில் நீர்ப்பாச்சலும் அதிக கவனம் செலுத்தல் நன்று. அதிகமான வரட்சித் தன்மை நோய்த் தொற்று ஏற்பட காரணமாயிருக்கும் மண்ணின் தன்மையைப் பொறுத்து நீர் பாய்ச்சும் அளவையும் நீர் பாச்சுகால இடைவெளியையும் நிர்ணயிக்கலாம்.

முன்பு பயிர் செய்யும் போது மிளகாய் பயிரில் இதே விதை நிலத்தில் இந்த நோய் தீவிரமானதாக வந்திருந்தால் நாம் சற்று எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும். இந் நோயிற்குரிய பூஞ்சணத்தின் வளர்ச்சி மண்ணில் மட்டுப்படுத்தப்பட்டதாயினும் மண்ணிலுள்ள இறந்த தாவர பாகங்களில் தப்பித்து வாழும்.

விதையின் மூலமாக பரவும் நோயாதலால் நோயற்ற பயிரிலிருந்து மிளகாய் பழத்திலிருந்து விதைகள் பெறப்படும். மிளகாய் பழத்திலிருந்து விதைகளைப் பெற வேண்டும்.

ஓங்கியடித்துப் பெய்யும் மழைநீரின் துளிகளுடனும் இந்த நோயின் வித்திகள் காவிச்செல்லப்பட்டு பரவும் வாய்ப்புக்களும் அதிகம்.

**விதைநேர்த்தி செய்தல் அவசியம்**

விதைநேர்த்தி செய்து பயன்படுத்தல் அவசியம் நேர்த்தி செய்வதற்கு கப்ரான் அல்லது திராம் எனும் பூஞ்சண நாசினிகளைப் பயன்படுத்தலாம்.



Chilli Leaf Curl

நோய்த் தாக்கம் மிளகாய் பழத்தில் அதிகரித்தால் செப்பு (Copper) கலந்து பூஞ்சண நாசினிகளை விசிறி கட்டுப்படுத்தலாம் நோயின் ஆரம்பத்தில் அறிகுறிகளை கண்டுபிடித்து கட்டுப்படுத்தினாலன்றி பின்பு இதன் சேதத்தை எதுவிதத்திலும் மட்டுப்படுத்தி விட முடியாது.

**மிளகாய் இலை சுருளல்**

மிளகாய்ப் பயிரில் மிக முக்கியமான பிரச்சினையாக அனைத்து விவசாயிகளும் திண்டாடும் பிரச்சினையாகவும் "இலைச் சுருளல் -Leaf curl" இருக்கின்றது. நாற்று மேடையிலிருந்து விளைநிலத்தில் பயிர் வளரும் போதும் இலைச்சுருளல் ஏற்பட்டால் பாதிப்பு அதிகமாகும். மிளகாய்ப் பயிர்ச்செய்கையில் இலைச்சுருளல் இல்லாது தங்களது மிளகாய்ப் பயிரை வளர்த்தெடுக்கவே முடியாது அல்லல்படும் விவசாயப் பெரு மக்களுக்கும் விவசாய மாணவர்களுக்குமாக இத் தாக்கத்தைப் பற்றி விரிவாக விளக்க முற்பட்டுள்ளேன். மிளகாய் இலைச்சுருளலை மூன்று காரணிகள் தோற்றுவிக்கின்றன. இம் மூன்றினைப் பற்றியும் தெளிவாகத் தெரிந்து கொண்டாலேயே மிளகாயில் தலையிடியாகியிருக்கும் இலைச்சுருளலை சமாளிக்க முடியும். வாருங்கள் அவை என்னவென்று பார்ப்போம். மிளகாயில் இலைச் சுருளலை ஏற்படுத்தும். மூன்று காரணிகளாக ,

1. பனிப்பூச்சி (Thrips)
2. சிற்றுண்ணி (Mite)
3. வைரசு (Leaf curl Gemini Virus)

ஆகியனவாகும். இதுவொரு வித்தியாசமான கூட்டணி. பூச்சி, சிற்றுண்ணி இவற்றுடன் நுண்ணங்கியான வைரசு இவை மூன்றும் வித்தியாசமானவை. உருவத்தில், செயற்பாட்டில் என வேறுபட்ட இவற்றினது சேதமும் வேறுபட்டது. ஆகையால் எந்தவிதமான சேதம் என வரையறுத்தாலேயே அதனை விளைவிக்கும் காரணியைக் கட்டுப்படுத்துவதற்கான வழிகளைக் கடைப்பிடிக்கலாம்.

மாறாக மூன்றுக்குமாகச் சேர்த்து ஒரே மாதிரியான கட்டுப்பாட்டை செய்ய முடியாது. இந்த மாதிரியான நிலைமைகளில் அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளாக இருந்தால் தனித்தனியாக காரணிகளுக்கு அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகளை சேர்த்துக்கொள்ளவேண்டும். அதுவும் இங்கே வெவ்வேறு காரணிகளாக இருப்பதனால் அவற்றிற்கு பொருத்தமான அனைத்துக் கட்டுப்பாட்டு முறைகளையும் தேர்ந்தெடுத்து ஒன்றுக்கொன்று முரண்படாத வகையில் ஒருங்கிணைந்த முகாமைத்துவமாகப் பயன்படுத்துதல்வேண்டும்.

முதலாவது காரணியான பனிப்பூச்சி மிளகாயின் இலையின்மேற்பகுதியிலிருந்து இலைப் பரப்பை சுரண்டி அகத்துறிஞ்சுவதனால் இதன் வாயுறுப்பை அராத்தி உறிஞ்சும் (Rasping and Sucking) என வரையறுத்திருக்கிறார்கள். இவ்விதமாக இளம் இலையின் மேற்பகுதி சுரண்டப்படுவதால் அந்தப் பகுதியிலுள்ள இலையின் மேல் கலங்கள் இறக்க இலை கீழ்ப்புறமுள்ள கலங்கள் வழமைபோல விருத்தியடைய இலைமேல் பக்கமாக, வள்ளம போன்று சுருளும். இதனை Upward Leaf Curling என அழைப்பர். இது ஒரு வகை இலைச் சுருளல்.

(தொடரும்)

# முகாமைத்துவ திறனற்ற அதிபர்கள் நீக்கப்படுவர்

## கல்வியமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களில் அதிகமானோருக்கு முகாமைத்துவத்திறன் இல்லை என கல்வியமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன தெரிவித்தார்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு பிரதிநிதிகளுக்கும் கல்வியமைச்சின் செயலாளருக்கும் இடையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முகாமைத்துவ திறனற்ற அதிபர்களினாலேயே அதிக பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதனால் முகாமைத்துவ திறனற்ற அதிபர்களை இனங்கண்டு அவர்களை அதிபர் பதவிகளிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் புதிதாக அதிபர்களை நியமிக்க முன்னர் அவர்களுக்கு முகாமைத்துவ திறன் தொடர்பாக பயிற்சி வழங்கப்படவுள்ளது.

நாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகளில் பிரச்சினைகள் காணப்படுகின்றது. இப்பிரச்சினைகள் அனைத்திற்கும் அதிபர்களின் திறமையின்மையே காரணமாகும் என அவர் மேலும் கூறினார். (ச-5)

# அதிர்ஷ்ட இலாபச்சீட்டு முடிவுகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறையின் புவியியற் கழகத்தினால் நடத்தப்படும் யாழ்ப்பாண புவியியலாளன், திட்டமிடல் ஆகிய இதழ்களின் வெளியீட்டுக்கான நிதியீட்டல் தொடர்பான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு புவியியற்துறை மண்டபம் இல.2இல் நடைபெற்றது.

இதற்கமைய அதிஷ்ட இலாப சீட்டு வெற்றி இலக்கங்களாக முதலாம் பரிசு இல- 2551, இரண்டாம் பரிசு இல-2223, மூன்றாம் பரிசு இல-3159 ஆகியவை ஆகும்.

மற்றும் சிறப்புப் பரிசிற்குரிய இலக்கங்கள் 1612, 8374, 8333, 2060 ஆகியவை இச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றுள்ளன.

எனவே இவ்விலக்கங்களை உடையவர்கள் வார நாட்களில் மாலை 4 மணிவரை யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு வெற்றிப் பரிசில்களை பெற்றுக்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர்தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் சர்வதேச சிறுவர் தினம் எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மானிப்பாய்ப் பிரதேச சபை மண்டபத்தில் செயலக நிர்வாக உத்தியோகத்தர் மா. முரளி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டி.ஜெயக்குமார், இலங்கை வங்கியின் மானிப்பாய் கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா, சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி சி.கந்தசாமி மற்றும் மானிப்பாய் குற்றவியல் பிரிவுபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.சந்திரபாலா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக கண்க்காளர் செல்வி த.தயாளினி, சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி.வே. நிறஞ்சலா, மானிப்பாய் பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம், யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் கு.விமலன் மற்றும் பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்க முகாமையாளர் ஆ.நாகராசா ஆகியோர் சிறப்பிக்கவுள்ளனர்.

(ஸ்ரீ-2)



உடுவில் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட யா/ ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயம் ஆகிய அணியினரை முறையே படங்களில் காணலாம். (படங்கள்:-சுன்னாகம் நிருபர்)

# வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களை இணையத்தினூடாக ஒன்றிணைக்க நடவடிக்கை

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில்புரியும் பல்வேறு துறைசார்ந்தவர்களையும் இணையத்தினூடாக தொடர்பினை ஏற்படுத்தி புலம்பெயர்ந்து தொழில் புரியும் இலங்கையர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு கடந்த 19ஆம் திகதி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சட்டத்தரணி கிங்ஸ்லி ரணவக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை வரலாற்றில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தத் தாம் தயாராகி வருவதாக தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களை இணையத்தினூடாக ஒன்றிணைத்துப் பணியாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெளிநாடுளிலுள்ள தொழில் முகவர்கள்,இலங்கைத் தூதரகங்கள், இலங்கையிலுள்ள வேலைவாய்ப்பு முகவர்கள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன இந்தத் திட்டத்தின் மூலம் இணைய வலைய்மைப்புக்குள் உள்ளடக்கப் படவுள்ளன.

இந்த வலையமைப்பானது மேலும் விரிவாக்கப்பட்டு பொறுப்புக்கூற வேண்டிய சகல நிறுவனங்களுக்கும் இடையே தகவல் பரிமாற்ற முறை ஊடாகத் தகவல் வழங்கவும் பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

வெளிநாடுகளிலுள்ள தொழில் வழங்குநர் தமக்குத் தேவையான தொழிலாளி பற்றி அந்நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு முகவருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந் நாட்டிலுள்ள வேலைவாய்ப்பு முகவரகம் இணைய வலையமைப்பினூடாக அந் நாட்டு இலங்கை தூதரகத்திற்கு அதுபற்றி அறிவிக்கும்.

பின்னர் இலங்கைத் தூதரகம் அது தொடர்பாக ஆராய்ந்து தொழில் அனுமதியினைப் பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன், இது பற்றிய தகவலினை இணையத்தினூடாக இலங்கையிலுள்ள வேலைவாய்ப்பு முகவருக்கும் இல்ங்கைப் பணியகத்திற்கும் அனுப்பி வைக்கும்.

அத்துடன் குறித்த சேவை வழங்குநரின் வருமானம்,அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் வேலை செய்யும் வீட்டிலுள்ள குடும்பத்தின் தகவல்களையும் இணையமயப்படுத்தல் வேண்டும்.

இந்த முறை மூலம் தற்போது இடைத்தரகர்கள்மூலம் மேற்கொள்ளப்படும் மோசடிகளைத் தவிர்க்க முடியமெனவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# தென் மாகாணத்தில் தெங்கு உற்பத்தி சரிவு

(கொழும்பு)

தென்மாகாணத்தின் தெங்கு பயிர்ச் செய்கையில் ஏற்பட்டுள்ள புதிய வகை நோயினால், தெங்கு பயிர்ச்செய்கை குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி கண்டுள்ளதாக பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தென்மாகாணத்தில் 70 ஆயிரத்து 198 ஏக்கர் பரப்பில் தெங்கு பயிர் செய்யப்பட்டுள்ளது.அவற்றுள் 38 ஆயிரத்து 965 ஏக்கர் பரப்பில் இந்தநோய் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2006 ஆம் ஆண்டு முதன் முதலாக இது வெலிகம பகுதியில் அவதானிக்கப்பட்டது.

தற்போது இந்த நோய் பரவியுள்ள நிலையில், தென்மாகாணத்தின் 21 சதவீதமான தெங்கு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# மன்னார் தமிழ்ச் செம்மொழி விழா

## — இரண்டாம் நாள் நிகழ்வு —

மன்னார் தமிழ் செம்மொழி விழாவின் "இலக்கிய விழா" இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரை மன்னார் நகர மண்டபத்தில் ராஜம் புஸ்பவனம் அரங்கில் மன்னார் தமிழ்ச்சங்க உபதலைவர் மக்கள் காதர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட உதவிச் செயலாளர் எம்.பரமதாசன், சிறப்பு விருந்தினர்களாக நானாட்டான் பிரதேச செயலாளர் சி.ஏ. சந்திர ஐயா மற்றும் மடு உதவி அரச அதிபர் தி.திரேஸ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக, மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் தில்லைநாதன், உடத்தலவின்ன எழுத்தாளரும் ஆய்வாளருமான கலாபூஷணம் பி.எம்.புன்னியாமீன் மற்றும் கொழுந்து ஆசிரியர் மூத்த மலையக எழுத்தாளர் அந்தனி ஜீவா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

காலை நிகழ்வாக விருந்தினர் மதிப்பளித்தல் நிகழ்வைத் தொடர்ந்து வரவேற்புரையை திருக்கேதீச்சரம் சிவனருள் இல்லப் பணிப்பாளர் வே.பொ.மாணிக்கவாசகர் நிகழ்த்த வரவேற்பு நடனத்தினை மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசியப் பாடசாலை மாணவிகள் மேடையேற்றுவர்.

தமிழ்மொழி வாழ்த்தை மன்னார்/நானாட்டான் மகாவித்தியாலய மாணவர்கள் நிகழ்த்த நன்றியுரையினை மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி எஸ்.றமேஸ் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவு, பட்டிமன்றம், விருதுவழங்கல் நிகழ்வு மற்றும் முதன்மை விருந்தினர் உரை என்பன நடைபெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்றைய மாலைநேர அமர்வில் "நாட்டிய விழா" நிகழ்வு மாலை 3 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை மன்னார் நகர மண்டபத்தில் சுண்டிக்குளிப் புலவர் அரங்கில் (விறாஸ் மொத்தம் கபிரியேல்) மன்னார் தமிழ் சங்க பொதுச் செயலாளர் வி.எஸ். சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆபேல், றெவ்வல், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.ஸ்ரீதேவி மற்றும் கலாரத்னா, திருமதி லீலாம்பிகை செல்வராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கலாப்பணா இயக்குநர் நாட்டிய யாரத்தினாகரம் திருமதி வசந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, நிக்கொட் முன்னாள் பிரதித் திட்டப் பணிப்பாளர் க.இராஜரெட்ணம் ஆகியோர் கலந்துகொள்வுள்ளனர்.

இந்நிகழ்வின் சிவதரிசனம் குழு நடனம், கோலாட்டம், கிராமிய வசந்தம், மன்னார் செல்வியல் நடனம், பாங்ரா நடனம்(வட இந்திய நடனம்), காவடிச்சிந்து, நடனசங்கமம்மற்றும் தில்லாணா என்பன நடைபெறவுள்ளன.(ஸ்ரீ-2)

# வன்னியில் கடமையாற்றிய 4 வைத்தியர்கள்

## ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கவுள்ளனர்

(கொழும்பு)

இறுதி யுத்த காலப்பகுதியில் வன்னிப் பகுதியில் கடமையாற்றிய வைத்திய அதிகாரிகள் 4பேர் அரசாங்கத்தின் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளனர்.

வைத்திய அதிகாரியான வி.சண்முகராஜா, ரி.சத்திய மூர்த்தி, சிவபாலன், ரி.வரதராஜா ஆகிய நால்வருமே இவ்வாறு சாட்சியமளிக்கவுள்ளதாகவும் இவர்களில் அடுத்த மாதம் 19 ஆம்திகதி வைத்திய அதிகாரிகளான சண்முகராஜா, சத்தியமூர்த்தி ஆகியோரும் 24ஆம் திகதி சிவபாலனும் 30ஆம் திகதி வரதராஜனும் சாட்சியமளிக்கவுள்ளனர்.

இறுதி யுத்த காலப்பகுதியில் வன்னிப் பகுதியில் கடமையர்றிய இவர்கள் இடம் பெயர்ந்து வவுனியாவுக்கு வந்த போது குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் விடுவிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை யுத்தகாலத்தின்போது முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராகக் கடமையாற்றியவரும் தற்போது யாழ்.மவட்ட அரசாங்க அதிபராகப் பணியாற்றி வருபவருமான திருமதி இமெல்டா சுகுமார் எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி நல்லிணக்க ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவுள்ளார். (ஸ்ரீ-2)

# 30 ஆண்டுகள் பழமையான வர்த்தமானி அறிவித்தலுக்கு பாராளுமன்றம் அங்கீகாரம்

30 ஆண்டுகள் பழமையான வர்த்தமானி அறிவித்தல் ஒன்றுக்கு பாராளுமன்றம் அங்கீகாரமளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் மகாவலி அமைச்சர் அமரர் காமினி திஸ்ஸ நாயக்கவினால் 30 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது.

நீர் வடிகாலமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அமைச்சரினால் இந்த யோசனைத் திட்டம் மீளவும் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.


ஆட்சி நடத்திய சகல அரசாங்கங்களும் இந்த மகாவலித் திட்டம் குறித்து உரிய கவனம் செலுத்தவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் தொடர்பான தகவல்களைத் திரட்டிய போது இந்தத் தகவல்கள் தமக்குக் கிடைக்கப் பெற்றதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி இந்த வர்த்தமானியில் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)










திருமறைக்கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் பரதநாட்டிய முதுநுண்கலைமாணி பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று காலை கலைத்தூது கலையகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு ஆயர் அருட்கலாநிதி யோசப் ஸ்ப்பிற்றெறி ஆண்டகை மங்கல விளக்கேற்றுவதையும் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந்தியாவின் திருச்சி கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி அதிபர் அருட் சகோதரி கலாநிதி மார்க்றெற் பஸ்ரின், திருமறைக்கலாமன்ற இயக்குநர் அருட் திரு நீ.மரியசேவியர் அடிகள் ஆகியோர் உரையாற்றுவதையும் அருட்சகோதரி கலாநிதி மார்க்றெற் பஸ்ரின் பட்டதாரியொருவருக்கு பதக்கம் அணிவிப்பதையும் ஆயர் யோசவ் ஸ்ப்பிற்றெறி ஆண்டகை சான்றிதழ் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

## வட -கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்கள் அமுல்படுத்தப்படும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலான திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

குறிப்பாக, சொந்த இடங்களில் மீள்குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சில அமைச்சரவை தீர்மாணங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறிய மற்றும் மத்தியதர கைத்தொழில் முயற்சிகளை மேம்படுத்துவது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீளவும் இயங்கச் செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

யுத்த நிலைமைகளினால் குறித்த கைத்தொழில் பேட்டையின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

65 ஏக்கரில் அமைந்த இந்தப் பிரதேசம் மீளவும் கைத்தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

(ஸ்ரீ-2)

## நிரந்தர பொலிஸ் அக்கடமியொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

பொலிஸ் அக்கடமி ஒன்று உருவாக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற சட்ட மூலமொன்றின் மூலம் நிரந்தர பொலிஸ் அக்கடமியொன்று உருவாக்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. இதற்கமைய தேசிய பொலிஸ் அக்கடமி ஒன்றை அமைப்பது தொடர்பான உத்தேச சட்டமூல வரைவுத் திட்டத்தை உருவாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் சட்ட ஒழுங்கை நிலை நாட்டுவதற்கு காத்திரமான பொலிஸ் தேவையொன்று அவசியமானதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேசிய பொலிஸ் அக்கடமி ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகரித்துள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். சட்டம், குற்றவியல் சட்டம், விசாரணை, மக்கள் தொடர்பு, இரசாயன பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

## சர்வதேச தொலைத் தொடர்பு சங்கத்தின் உறுப்புரிமை தொடர்பில் இலங்கைக்கு ஏமாற்றம்

ஜெனிவாவில் அமைந்திருக்கும் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் உறுபுரிமைக்கான போட்டியில் இலங்கை ஏமாற்றத்துக்குள்ளாகியுள்ளது. பங்களாதேஷ் அதனைப் பெற்றுக் கொண்டுள்ளது.

மொத்த வாக்குகள் 161 இல் இலங்கைக்கு ஆதரவாக 79 வாக்குகள் மட்டுமே பதியப்பட பங்களாதேஷ் 123 வாக்குகளைப் பெற்றுக் கொண்டிருந்தது.

ஐ.டி.யூ எனப்படும் சர்வதேச தொலைத்தொடர்பு சங்கத்தின் உறுப்புரிமைக் கென 48 நாடுகள் தெரிவு செய்யப்படுவதுடன் ஐந்து கண்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்தத் தெரிவு அமைந்திருக்கும்.

நான்கு வருடங்களுக்கொரு முறை நடைபெறும் உறுப்புரிமை நாடுகளுக்கான தேர்தலில் வெற்றி பெறும் நாடுகளிலிருந்தே அதற்கான பிரதான பதவிகளுக்கான நபர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

சர்வதேச தொலைத்தொடர்பு சங்கமானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் மிகப் பழை மையான ஒரு அமைப்பு என்பதுடன் அதன் உறுப்புரிமைக்கான போட்டியில் இலங்கை பின்னுக்குத் தள்ளப்பட்டமையானது சர்வதேச மட்டத்தில் அதன் இராஜதந்திர நகர் வுகளுக்கான பின்னடைவாகவே கருத வேண்டியுள்ளது.

(ஸ்ரீ-2)

## வர்த்தக நிலையமொன்றில் கொள்ளையில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவில் கையடக்கத் தொலைபேசி வர்த்தக நிலையம் ஒன்றில் கொள்ளையில் ஈடுபட்ட ஒருவரை சந்தேகத்தின் பெயரில் நேற்று அதிகாலை களுவாஞ்சிக்குடி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி இரவு களுவாஞ்சிக்குடி நகரில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு களவாடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் தீவிர விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இது தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பி.ஆர்.மானவடு தெரிவித்தார்.

இதனடிப்படையில் இப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சூரையடி என்னும் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி அருள்பிரகாசம் (வயது28) என்பவர் கைதுசெய்யப்பட்டதாகவும் அவரிடம் இருந்து கையடக்கத்தொலைபேசி ஒன்று உட்பட அதற்குரிய 35 பற்றிக்களும் கைப்பற்றப்பட் டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையம் பெரும் குற்றத் தடுப்புபிரிவு பொறுப்பதிகாரி எஸ்.பி.கே பிரியதர்சன தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் தொடர்பில் மேற்கொள்ளப்ட்ட கடுமையான விசாரணையின் போது கல்முனையில் வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து குறித்த கையடக்கத் தொலைபேசி பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களும் நேற்று பிற்பகல் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர்.மானவடு தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

## கிளிநொச்சியில் சட்டவிரோத மின்சார பாவனை அதிகரிப்பு

கிளிநொச்சியில் சட்டவிரோதமாக மின் சாரத்தைப் பயன்படுத்திய 320 பேருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

கடந்த ஒருவார காலத்துள் கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புகளின் போது இந்த முறைகேடுகள் கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றவர்களிடம் இருந்து 67 இலட்சத்து 19ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை அப ராதமாக அறவிடப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைக ளில் ஈடுபடுவோரினால் இலங்கை மின் சாரசபை பாரியளவில் நஷ்டத் தை எதிர்நோக்க நேரிடுவதாகவும் சுட்டிக்காட் டப்படுகிறது. (ஸ்ரீ-2)

# காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க அமெரிக்கா முன்வர வேண்டும்

## பாகிஸ்தான் வேண்டுகோள்

(வோஷிங்டன்)

தெற்காசியாவில் நிலவும் பிரச்சனைகளை குறிப்பாக காஷ்மீர் பிரச்சனையைத் தீர்க்க அமெரிக்கா முன்வரவேண்டும் என்று பாகிஸ்தான் அமெரிக்காவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமெரிக்கா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான கொள்கைகள் தொடர்பான மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தை அமெரிக்கவில் நடந்து வருகிறது. அதில் பாக். வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா முகமது குரேஷி கலந்து கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அவர் வழங்கிய பேட்டியில்

நிராயுதபாணிகளான காஷ்மீரில் இளைஞர்களை கொடூரமாக எதிர்கொண்டு வரும் இந்திய இராணுவத்தின் செயலை மனச்சாட்சி உடைய எந்த மனிதனும் புறக்கணிக்கமாட்டான். கடந்த மூன்று மாதங்களில் மட்டும் காஷ்மீரில் 100க்கும் அதிகமான இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

தெற்காசியாவில் அமைதி நிலவவேண்டும் என்பதில் பாக். ஆழ்ந்த விருப்பம் கொண்டிருக்கிறது. அத்தோடு இந்தியாவுடன் சிறந்த நட்பு நாடாகவும் இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறது. இருதரப்பிலான பேச்சுவார்த்தகள் தான் முன்னேற்றத்துக்கு வழி என்பதை இரு தரப்பும் ஏற்றுக்கொண்டிருக் கின்றன.

தெற்காசியாவில் அமைதி நிலவ, நிலையான தன்மை ஏற்பட, வளர்ச்சி மேம்பட தெற்காசியாவில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க அமெரிக்கா முன்வர வேண்டும். காஷ்மீர் மக்களுக்கு நீதி வழங்குவதில் இருந்து அது தன் செயலைத் தொடங்க வேண்டும் என குரேஷி தெரிவித்தார். (ஸ்ரீ-2)



கொலம்பிய புரட்சிப்படை எனும் புதிய அமைப்பினை உருவாக்கி அந்நாட்டு அரசுக்கெதிராக பயங்கரவாத தாக்குதல்களை நடத்த விருந்ததாக கைது செய்யப்பட்ட ஒருவரை தலைநகர் பகூட்டா நகரில் பொலிஸார் பலத்த பாதுகாப்புடன் அழைத்து வருவதைப் படத்தில் காணலாம்.

# ஆங் சான் சூகியின் மேல்முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஏற்பு

மியான்மார் எதிர்க்கட்சித் தலைவர் ஆங் சான் சூகி தனது வீட்டுக் காவலை எதிர்த்து தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

அவரது காவல் அவ்வப் போது நீட்டிக்கப்பட்டு வருகிறது. அவரின் அப்போதைய 18 மாத வீட்டுக் காவல் எதிர்வரும் நவம்பர் 13 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இதனிடையே நவம்பர் 7 ஆம் திகதி அங்கு பொதுத் தேர்தல் நடைபெறுகிறது. இராணுவ ஆட்சியாளர்களுக்கு சாதகமான ஆட்சி அமைவதில் ஆங் சான் சூகி இடையூறு விளைவிக்கலாம் என்பதால் அவரது வீட்டுக் காவல் மேலும் நீடிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தில் அவர் மனு தாக்கல் செய்துள்ளார். இந்த மனு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 3 நீதிபதிகள் அடங்கிய குழு மனுவை விசாரிக்கும் என்றும் விசாரணை திகதி அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுக் காவலில் இருக்கும் ஆங் சான் சூகி இதற்கு முன்னர் தாக்கல் செய்த 2 மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

இராணுவ ஆட்சி நடைபெறும் மியன்மாரில் பெரும்பாலும் ஆட்சியாளர்களுக்கு சாதகமாகவே தீர்ப்புகள் வெளியாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஹெயிட்டியில் கொலரா நோயினால் 138 பொதுமக்கள் உயிரிழப்பு

மத்திய ஹெயிட்டியில் பரவி வரும் கொலரா நோய் காரணமாக 138 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த கொலரா நோயினால் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான மக்கள் சைன்ற் மார்க் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுமார் 1500 பேர் இந்த நோய்த் தொற்றுக்கு ஆளாகியுள்ளதுடன் இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாந்திபேதி, வயிற்றுழைவு மற்றும் காய்ச்சல் அறிகுறிகள் காணப்படுவதாகவும் அந்த நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த ஜனவரி மாதம் ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களிடையே இந்த தொற்று நோய் பரவக் கூடிய அபாயம் இருப்பதாக அஞ்சப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தண்ணீர் மற்றும் உணவு மூலமே கொலரா பரவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கு உடனடியாக சிகிச்சை எடுக்காவிடின் உயிரிழக்கக் கூடிய அபாயம் ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




# குடியை நிறுத்தும் மரபணு; ஆராய்ச்சியில் கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

குடியை நிறுத்துவதில் ஜீன் எனப்படும் மரபணு முக்கிய பங்கு வகிக்கிறது என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். சிவை பி2 இ1 என்றழைக்கப்படும் ஜீன் குடியை கட்டுப்படுத்தவதில் முக்கிய பங்கு வகிக்கிறது என டெலிகிராப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மனிதனின் உடலில் 10 முதல் 20 சத வீதம் வரை இந்த ஜீன்கள் காணப்படுகிறது. இந்த ஆராய்ச்சிக்காக கல்லூரி மாணவர்கள் சுமார் 237 பேரிடம் கணக்கெடுக்கப்பட்டது.

இது குறித்து ஆராய்ச்சி செய்த பேராசிரியர் கிரிக் வொயில்ம்சன், இந்த மரபணு குடிப்பழக்கத்தை கட்டுப்படுத்துவதில் பெரும் பங்கு கொண்டுள்ளது என கூறியுள்ளார்.

இந்த சிவை பி2 இ1 மரபணு கல்லீரலில் உருவாவதில்லை. மூளை பகுதியில் உருவாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# மியன்மாரில் மனித உரிமைகளை பாதுகாக்க அயல் நாடுகள் தவறியுள்ளன

## நோபல் அறிஞர் குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

மியன்மாரில் மனித உரிமை குறித்து அயல் நாடுகளான இந்தியா, சீனா, தாய்லாந்து ஆகியவை அறிவுறுத்த தவறிவிட்டன என நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியா சென் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு அமர்த்தியா சென் தெரிவிக்கையில், மியான்மரில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் எண்ணம் தற்போதைய இராணுவ ஆட்சிக்கு இல்லை. அடுத்த மாதம் நடக்கும் தேர்தல் நியாயமானதாக இல்லை. ஜனநாயகம் குறித்தும் மனித உரிமை குறித்தும் அயல் நாடுகளான இந்தியா, சீனா, தாய்லாந்து ஆகியவை மியன்மாரை வற்புறுத்த தவறிவிட்டன.

உலகின் நல்ல மனிதர்களுள் ஒருவராகக் கருதப்படும் பிரதமர் மன்மோகன் சிங், மியன்மார் நாட்டு சர்வாதிகாரிக்கு டில்லியில் சிவப்பு கம்பள வரவேற்பு அளித்து அவருடன் நின்று புகைப்படங்களுக்கு போஸ் கொடுத்து மகிழ்கிறார். இந்திய பிரஜை என்ற முறையில் இந்த விடயம் எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

மியன்மார் நாட்டின் செயல்களை வீட்டோ அதிகாரம் பெற்ற சீனா அங்கீகரித்து வருகிறது கூறப்போனால் இந்தியா, சீனா மற்றும் தாய்லாந்து ஆகியவை மியன்மாருடன் வர்த்தக உறவை மேம்படுத்திக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றன என் தந்தை பணி நிமித்தமாக மியன்மாரில் இருந்த போது நானும் சில காலம் மியன்மாரில் தங்கியிருந்தேன். இவ்வாறு அமர்த்தியா சென் தெரிவித்தார்.

ஐ.நா.மனித உரிமை அமைப்பின் தூதர் ஒஜியா குயின்டானா குறிப்பிடுகையில், மியன்மாரில் 2ஆயிரத்துக்கும் அதிகமான அரசியல் கைதிகள் சிறையில் உள்ளனர். முக்கிய ஜனநாயக கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டு தேர்தலில் போட்டியிட தகுதியிழப்பு செய்யப் பட்டுள்ளார்.

எதிர்க்கட்சியினர் போதுமான அளவில் தேர்தலில் போட்டியிடுவதற்கு கால அவகாசம் அளிக்கப்படவில்லை. இந்நிலையில் நடைபெறும் தேர்தல் நியாயமானதாகவும் உலக நாடுகளின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இருக்காது எனவும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



துருக்கி வந்திருந்த ஈராக் பிரதமர் நௌரி அல்- மாலிக் (இடது), அந்நாட்டு பிரதமர் ரீசெப் தையாப் ஈர்டோஜன் ஆகியோர் அங்காரா நகரில் சந்தித்து கைலாகு கொடுப்பதை படத்தில் காணலாம்.

# இந்தியாவின் தேசிய பாரம்பரிய விலங்காக யானை அறிவிப்பு

யானையை இந்தியாவின் தேசிய பாரம்பரிய விலங்காக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் நேற்று அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

நாட்டில் யானைகளின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து வருவதைக் கருத்திற் கொண்டு அவற்றைப் பாதுகாக்கும் நோக்குடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யானைகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க சுற்றுச்சூழல் நிபுணர் மகேஷ் ரங்கராஜன் தலைமையில் கடந்த பெப்ரவரி மாதம் 12 பேர் கொண்ட உயர்நிலைக் குழுவை மத்திய அரசு அமைத்தது.

அண்மையில் அந்தக் குழு தனது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது. அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் யானைகளை பாதுகாப்பதற்காக அவற்றுக்கு சிறப்பு அந்தஸ்து வழங்க முடிவு செய்யப்பட்டது.

அதன் தொடர்ச்சியாகவே யானைகளை தேசிய பாரம்பரிய விலங்குகளாக அதிகாரபூர்வமாக அறிவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் ஜெயராம் ரமேஷ் மேற்கொண்டார்.

இதைத் தொடர்ந்து இந்தியாவின் தேசிய விலங்காக புலி உள்ள நிலையில் புலிகளைப் பாதுகாக்க தேசிய புலிகள் பாதுகாப்பு அமைப்பு உள்ளதைப் போலவே யானைகளைப் பாதுகாப்பதற்கும் தேசிய யானைகள் பாதுகாப்பு அமைப்பு உருவாக்கப்படவுள்ளது. அதற்காக வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் ஜெயராம் ரமேஷ் ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிய கண்டத்திலேயே இந்தியாவில் தான் அதிக எண்ணிக்கையிலான யானைகள் உள்ளன. அதாவது ஆசியாவின் 60 சதவீத யானைகள் இருப்பது இந்தியாவில் தான்.

ஆனால் அண்மைக்காலமாக யானைகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து கொண்டே வருகிறது. ஏறத்தாழ 3 ஆயிரத்து500 யானைகள் இருக்கவேண்டிய சூழலில் தற்போது சுமார் 2 ஆயிரத்து 500 யானைகள் மட்டுமே நாட்டில் இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1992 ஆம் ஆண்டில் இருந்தே யானைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஒபாமாவின் வருகைக்கு முன் இந்தியாவில் பயங்கரவாதிகள் ஊடுருவத் திட்டம்

## உளவுத்துறை எச்சரிக்கை

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் இந்திய வருகையையொட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் அவரை வரவேற்க சிறப்பு நிகழ்ச்சிகள் தயாரிப்பு, வீதிகள் சீரமைப்பு என பலகட்டப் பணிகளில் இந்திய உயரதிகாரிகள் ஈடுபட்டு வரும் வேளையில் பயங்கரவாதிகள் மிரட்டல் ஒருபுறம் அச்சுறுத்தி வருகிறது. இதனை சமாளிக்க எடுக்க வேண்டிய பாதுகாப்பு உள்நாடவடிக்கையில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் முதல்வாரத்தில் ஒபாமா இந்தியா வருகிறார். இது தொடர்பான அவரது கால அட்டவணையை இன்னும் அமெரிக்கா அதிகாரபூர்வமாக அறிவிக்க வில்லையென்பது வேறுவிடயம்.

இருப்பினும் இவர் வருகை தொடர்பான ஏற்பாட்டுப்பணிகள் குறித்து ஆய்வு செய்வதற்கு அமெரிக்க அதிகாரிகள் பலர் டில்லியில் முகாமிட்டுள்ளனர். எதிர்வரும் நவம்பர் 8ஆம் திகதி பாராளுமன்றில் ஒபாமா உரையாற்றுகிறார். இதற்கென பாராளுமன்றம் புதுப்பிக்கும் பணிமும்முரமாக நடந்துவருகிறது.

இதற்கிடையில் ஒபாமா வருகைக்கு முன்னதாக இந்தியாவில் தற்கொலைப் படைத்தாக்குதல் நடத்திட முயற்சி மேற்கொள்வார்கள் என உளவுத்துறை எச்சரிக்கை செய்தியை மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது. (ஸ்ரீ-2)

# தாமே அடுத்த முதல்வரென ஸ்டாலின் அறிவிக்க தயாரா?

## விஜயகாந்த் கேள்வி



மு.க.ஸ்டாலினோ அல்லது மு.க. அழகிரியோ தாங்கள் தான் அடுத்த முதல்வர் என்று அறிவிக்கத் தயாரா? என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் கேள்வி எழுப்பினார்.

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகியவர்கள் தே.மு.தி.க.வில் இணையும் நிகழ்ச்சி சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த கட்சித் தலைவர் விஜயகாந்த் கூறுகையில்;

விஜயகாந்த கட்சி ஆரம்பித்தவுடனே முதல்வராக நினைக்கிறார் என்று துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியுள்ளார். ஆமாம், தமிழகத்தின் அடுத்த முதல்வராக வேண்டும் என்று நான் நினைப்பது உண்மைதான். ஆனால் ஸ்டாலினோ அல்லது மு.க.அழகிரியோ தாங்கள் தான் அடுத்த முதல்வர் என்று அறிவிக்கத் தயாரா? எந்த கட்சி வேண்டாம் என்று காங்கிரசை அண்ணா அனுப்பினாரோ அந்த காங்கிரசோடு கூட்டணி சேர விமான நிலையத்துக்கும் டில்லிக்கும் தூது செல்கிறார்கள்.

சுரேஷ் கல்மாடி பொதுநலவாய போட்டியில் ரூ.8 ஆயிரம் கோடி ஊழல் என்கிறார்கள். லலித் மோடி ரூ.460 கோடி ஊழல் என்கிறார்கள். ஆனால் தொலைத்தொடர்பு துறையில் 1.5 இலட்சம் கோடி ஊழல் புரிந்ததாகக் கூறப்படும் ஆ.ராசாவின் மீது ஏன் விசாரணை இல்லை? கோடிகள் எல்லாம் சாதாரணமாகிவிட்டது.

எங்கள் கட்சிக்கு கொள்கை இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். கொள்கை என்ன கொள்கை? இன்றைய பிரச்சினை எதுவோ அதை தீர்ப்பது தான் கொள்கை. பூனை வெள்ளையா? கறுப்பா? என்று பார்க்க கூடாது. எலியை பிடிக்கிறதா? என்பது தான் முக்கியம்.

இன்றைய பிரச்சினை விலைவாசி உயர்வு இதனை கட்டுப்படுத்த வேண்டும், வறுமையை ஒழிக்க வேண்டும் ,வருமானத்தை பெருக்க வேண்டும் இது தான் கொள்கை.

டி.வி. கொடுத்தோம், அடுப்பு கொடுத்தோம், வீடு கொடுத்தோம் என்கிறார்கள். இன்னமும் இந்த மக்களை இதை வாங்கும் அளவுக்கு ஏழையாகவே வைத்திருக்கிறீர்களே ஒரு ரூபாய்க்கு அரிசி கொடுக்கிறோம் என்றெல்லாம் சொல்பவர்கள் வாக்குக்கு பணம் கொடுப்பது ஏன்? டி.வி. கொடுப்பதால் அறிவை வளர்ப்பதாக சொல்கிறார்கள்.


ஏன் அறிவை வளர்க்கக் கூடிய 20 அலைவரிசைகளை இலவசமாக கேபிளில் வழங்க வேண்டியது தானே? பிரேக் இல்லாத வண்டி போல தி.மு.க. அரசு போய்க் கொண்டிருக்கிறது. பொறுத்திருந்து பாருங்கள். தமிழ் நாட்டில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆட்சி மாறி வருகிறது. இந்த முறையும் நிச்சயம் ஆட்சி மாறும்.

விஜயகாந்த் யாரோடு கூட்டணி சேரப் போகிறார் என்று தான் அவலோடு எதிர்பார்க்கிறார்கள். இப்போதும் சொல்கிறேன்... மக்களோடும், கடவுளோடும் தான் கூட்டணி. அதற்கெல்லாம் இன்னும் நிறைய நாட்கள் இருக்கிறது. வருகிறவர்கள் வரட்டுமே என்று விஜய காந்த் கூறினார். ஸ்ரீ




# டில்லியில் ராகுல் காந்தியுடன் நடிகர் ராதாரவி திடீர் சந்திப்பு

## காங்கிரசில் சேர்வது குறித்து ஆலோசனை



(புதுடில்லி)

பிரபல நடிகர் ராதாரவி வில்லன் மற்றும் குணச்சித்திர பாத்திரங்களில் ஏராளமான படங்களில் நடித்துள்ளார். நடிகர் சங்கத்தில் பொதுச் செயலாளராகவும் பதவி வகிக்கிறார். டில்லி புறப்பட்டுச் சென்றுள்ளார். நேற்று காலை 8 மணிக்கு சோனியாகாந்தி இல்லத்துக்கு சென்று அங்கு ராகுல்காந்தியை சந்தித்து பேசினார். 10 நிமிடம் இந்த சந்திப்பு நடைபெற்றது.

தமிழக அரசியல் நிலவரம் பற்றி இருவரும் பேசியதுடன் காங்கிரசில் ராதாரவி இணைவது பற்றியும் பேசப்பட்டதாக கூறப்படுகிறது. ராகுல்காந்தியை சந்தித்த பின் ராதாரவி கூறுகையில், ராகுல் காந்தியிடம் திரைப்பட 60 ஆவது விழாவில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தேன். தமிழக அரசியல் நிலவரம் குறித்து அவரிடம் பேசினேன். காங்கிரசில் இணைவது பற்றி உறவினர்கள், நண்பர்களுடன் கலந்து பேசி ஒரு வாரத்தில் அறிவிப்பேன். ராகுல்காந்தி ஒரு சக்திமிக்க தலைவர்.

அவரது பழக்க வழக்கம் எனக்கு பிடிக்கும். காங்கிரசில் சேரும் முடிவை மின்னஞ்சல் மூலம் தெரிவித்தால் நடவடிக்கை எடுப்பதாக என்னிடம் கூறினார். இவ்வாறு ராதாரவி கூறினார்.

ராதாரவி ஆரம்ப காலத்தில் தி.மு.க.வில் இருந்து பின்னர் வைகோவின் ம.தி.மு.க. வில் சேர்ந்தார். அதன் பின் அ.தி.மு.க.வில் இணைந்தார்.

சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியில் இருந்து எம்.எல்.ஏ.வாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அரசியலை விட்டு ஒதுங்கி இருக்கிறார். காங்கிரஸ் கட்சிக்கு நடிகர்களை சேர்க்க ராகுல் காந்தி ஆர்வம் காட்டி வருகிறார்.ஓரிரு வாரங்களுக்கு முன் எஸ். வி.சேகர் டில்லி சென்று ராகுலை சந்தித்து விரைவில் காங்கிரசில் இணையப் போவதாக கூறினார். ராதாரவியும் காங்கிரசில் இணையவுள்ளதாக கூறப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# இந்தியாவில் மலேரியா நோய் காரணமாக ஆண்டுக்கு 2 இலட்சம் பேர் உயிரிழப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் மலேரியா நோய் காரணமாக ஆண்டுக்கு ஏறக்குறைய 2இலட்சம் பேர் உயிரிழப்பதாக மருத்துவ இதழான லான்செட் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலக சுகாதார அமைப்பு இந்தியாவில் மலேரியா நோயால் ஆண்டுக்கு 15 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக தெரிவித்திருந்தது. ஆனால் லான்செட் இதழ் ஆண்டுக்கு80 ஆயிரம் குழந்தைகள் உட்பட 2 இலட்சம் பேர் உயிரிழப்பதாகத் தெரிவித்துள்ளது.

90 சதவீத உயிரிழப்புக்கள் ஊரகப் பகுதிகளில் ஏற்படுகின்றன. எந்தவிதமான மருத்துவ சிகிச்சையும் அளிக்காததால் 86 சதவீத உயிரிழப்புக்கள் வீட்டிலேயே நிகழ்வதாக லான்செட் தெரிவிக்கிறது.2002 முதல் 6ஆயிரத்து 671 பகுதிகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

மலேரியாவுக்கு ஒரிசாவில் தான் அதிக அளவிலான உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. அங்கு மட்டும் ஆண்டுக்கு 50 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர். அதற்கு அடுத்ததாக சத்தீஸ்கர், ஜார்க்கண்ட், அசாம் மாநிலங்களில் அதிக உயிரிழப்புகள் ஏற்படுவதாக லான்செட் ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ

புரிந்து கொள்ளாத போதும் பெறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதி விடுகிறான். – சாக்கிரடீஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## மூன்றாம் உலகப் போர் நடக்கும் சாத்தியம் உண்டா?

முன்பெல்லாம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள் என அரசிடம் கூறினால் அதற்கான பதில் எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க மறுக்கின்றன. இதனால் தீர்வு காணமுடியாமல் இருக்கிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழுத்தம் கொடுங்கள் என சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசுகள் கோரிக்கை விட்ட வரலாறுகள் உண்டு.

அத்தகைய கோரிக்கைகள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பரிபூரண எண்ணத்தில் விடுக்கப்பட்டதன்று.

மாறாக பிரச்சினைக்கு தீர்வு காண்பதை தட்டிக்கழிக்கும் நோக்கில் கூறப்பட்டதாகும்.

தீர்வு என்று வந்துவிட்டால், எதிர்க்கட்சிகளும் தம்பட்டம் அடிப்பது வழக்கமாக இருந்தமையால் இலங்கை அரசுகளின் காலங் கடத்தும் நாடகங்களும் சின்னத்திரை நாடகமாக நீண்டு சென்றன.

இப்போது நிலைமை மாறிவிட்டது. அதாவது எதிர்க்கட்சிகளின் ஆதரவு இல்லாமலே மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை அரசு கொண்டுள்ளது.

எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெறுவது மிகவும் சுலபமான காரியம்.

அப்படியானால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கவில்லை எனக் கூறி அரசு தப்பமுடியாது.

இந்நிலையில் தான் தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைக்காத போது சிங்கள எதிர்க்கட்சிகள் ஆதரவு தரவில்லை எனக் கூறிய ஆட்சியாளர்கள் இப்போது தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட வேண்டும் எனக் கூறுவது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு தயாராக இல்லை என்பதை நிரூபிப்பதாக அமையும்.

பரவாயில்லை இந்த நாட்டில் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதுவும் கொடுக்க மாட்டார்கள் என்பது தெரிந்த உண்மை.

ஆனாலும் இந்த நாட்டில் நிரந்தரமான அமைதிக்கு எவரும் வழிசமைக்கின்றார்கள் இல்லையே என்ற கவலை இருக்கவே செய்கிறது.

ஒருமுறை விஞ்ஞானி ஐன்ஸ்ரனிடம் மூன்றாம் உலகப் போர் ஏற்படுமா? என சிலர் கேட்டார்கள்.

அதற்கு ஐன்ஸ்ரின் மூன்றாம் உலகப் போர் ஏற்படுமா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் நான்காம் உலகப் போர் நடக்குமாக இருந்தால், கல்லுகளும், பொல்லுகளுமே ஆயுதங்களாகஇருக்கும் என்று கூறினார்.

ஐன்ஸ்ரினிடம் கேட்ட கேள்வியை சுருக்கி உலகிற்கு பதிலாக இலங்கையைக் குறித்து எம்மிடம் கேட்டால், அது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் இன்னுமொரு போர் நடந்தால் உலகப் படத்தில் இலங்கையின் இடம் வெறுமையாகவே இருக்கும் என்பதை மட்டுமே எம்மால் பதிலாகக் கூறமுடியும்.

என்ன செய்வது! வருமுன்னர் உணரும் தன்மை என்பது தலைவிதியோடு சம்பந்தப்பட்டிருந்தால் அதை தடுப்பது யாராலும் முடியாது. அவ்வளவுதான்.

# 'பசியின் கொடுமையினால் நத்தைகளைச் சாப்பிட்டோம்'

## மரணத்திலிருந்து மீண்டவர்கள் தெரிவிப்பு

இந்தோனேசியாவின் ஆள் நடமாட்டம் அற்ற பனைடான் தீவில் கரை சேர்ந்த நாங்கள் பசி தாங்க முடியாமல் நத்தைகளைக் கூட சாப்பிட்டோம் என இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து ஒரு தொகை தமிழர்கள் கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அவுஸ்திரேலியாவை நோக்கி படகு ஒன்றில் புறப்பட்டனர்.

மிகவும் பேராபத்தான 45 நாட்கள் கடல் பயணத்தின் பின் தெய்வாதீனமாக இந்தோனேசியாவின் பனைடான் தீவில் கரை சேர்ந்தனர். இவர்கள் 20 ஆம் திகதி இந்தோனேசியா கரையோரக் பொலிஸாரால் மீட்கப்பட்டனர்.

இக்கடல் பயணத்தில் எதிர்கொண்ட பயங்கரங்கள், ஆள் நடமாட்டம் அற்ற இந்தோனேசியத் தீவில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் ஆகியன குறித்து ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இத்தமிழர்களில் ஒருவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் இப்பேட்டியில் முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு,

கடந்த ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி புறப்பட்டோம். எமது பிரயாண இலட்சியமாக அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவு இருந்தது. தலைக்கு 2000 அமெரிக்க டொலர் வரை செலுத்தி இருந்தோம். 15 நாட்களில் கிறிஸ்மஸ் தீவை அடைந்து விட முடியும் என்று பிரயாண ஏற்பாட்டாளர்கள் தெரிவித்து இருந்தனர்.

### படகு உடைந்தது

எடுத்து வந்த பொருட்களுடன் 15 நாட்கள் சமாளித்தோம். நாம் இத்தீவை நெருங்கினோம். இதுதான் கிறிஸ்மஸ் தீவை நெருங்கி விட்டோம் என நினைத்தோம். எமது கெட்டகாலம். படகு உடைந்து விட்டது. படகின் எரிபொருளும் தீர்ந்து விட்டது.

படகின் திசைஅறி கருவிகூட செயலிழந்து விட்டது. திசையறி கருவி செயல் இழந்ததால் எங்கே இருக்கின்றோம்? என்று ஊகிக்க முடியாமல் போய்விட்டது. காற்றில் படகு தத்தளிக்கத் தொடங்கியது. உடைந்த படகில் 30 நாட்கள் கடலில் அந்தரித்தோம்.

அந்த 30 நாட்களும் உணவு, குடிதண்ணீர் என்பன கையிருப்பில் இருக்கவில்லை. நோய்வாய்ப்பட்டு வாந்தி எடுத்தோம். கடலில் மீன் பிடித்துச் சாப்பிட்டோம். மழை நீரை சேமித்துக் குடித்தோம். தீவுக்கு அருகில் இருந்த எரிமலையை நோக்கி படகு கடல் அலையால் இழுத்துச் செல்லப்படத் தொடங்கியது.

எல்லோரும் ஒரேயடியாக செத்து விட்டோம் என்றுதான் எண்ணினோம். ஆனால் எரிமலைக்குள் சிக்கி விடவில்லை.

### மூவர் மரணம்

மீன்பிடிப் படகு ஒன்று கண்ணில் பட்டது. எமது சகாக்களில் இளைஞர்கள் இருவர் கடலில் குதித்தனர்.

அப்படகைச் சென்றடைந்து உதவி கோருகின்றமை அவர்களின் நோக்கமாக இருந்தது. பாவம் நீரில் மூழ்கி இறந்து விட்டனர். எமது படகு இழுபட்டுச் சென்று கருங்கல் பாறை ஒன்றில் மோதியது.

இதில் பெண் சகா ஒருவர் பாறையில் மோதுண்டு இறந்து விட்டார். கரை இறங்கினோம். ஆள் நடமாட்டம் அற்ற தீவு. பசியோ கொடுமை. நத்தை, தேங்காய், பழங்கள் என்று அங்கு கையில் அகப்பட்டவற்றைச் சாப்பிட்டோம்.

### 15 பேரைக் காணவில்லை

இந்தோனேசிய காவல்துறையினர் எம்மை மீட்டார்கள். ஆனால் எமது குழுவைச் சேர்ந்த 15 பேர் இத்தீவில் காணாமல் போயுள்ளனர்.

இவர்களையும் காவல் துறையினர் மீட்டுத் தர வேண்டும். கடலில் பேராபத்தில் சிக்கிய நாம் உயிர் தப்புவோம் என்று ஒரு போதும் நினைத்திருக்கவே இல்லை.

15 பெண்கள், 18 சிறுவர்கள் வரை எமது குழுவில் தற்போது உள்ளனர். சிறுவர்கள் இரண்டு வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடைப்பட்டவர்கள். நாம் எமது நாட்டில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள்.

யுத்தத்தில் ஊனம் அடைந்தவர்கள், உறவுகளை இழந்தவர்கள் கூட எம்மில் இருக்கின்றார்கள். அங்கு எமது உயிருக்கு உத்தரவாதம் இல்லை.

எமக்கோ, பிள்ளைகளுக்கோ எதிர்காலம் இல்லை. ஆகவேதான் இப்பயங்கரமான கடல் பயணத்தை மேற்கொண்டோம். எமக்கு அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் வேண்டும் என்றார்கள். (ச-5)

# குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் உள்ள கைதிகளுக்கு பிணைவழங்க நடவடிக்கை எடுக்கவும்

## சட்டமா அதிபருக்கு பிரதம நீதியரசர் உத்தரவு

(கொழும்பு)

குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு பிணை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சட்டமா அதிபருக்கு நீதியரசர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளில் தாமதம், நிதியின்மை மற்றும் இரசாயன பிரிசோதனை அறிக்கை சமர்பிக்கப்படாமை காரணமாக பிணையில் செல்ல முடியாத கைதிகள் தொடர்பில் உயர் நீதிமன்றம் சட்டமா அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது.

இந்தக் கருத்தின் படி பல வருடங்களாக விசாரணைகள் எதுவுமின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளும் உள்ளடங்குகின்ற போதும் உயர் நீதிமன்றம் அவர்கள் தொடர்பில் எந்த ஒரு கருத்தையும் வெளியிடவில்லை.

பிணையில் செல்ல முடியாத மூன்று பேர் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மூன்று அடிப்படை மனுக்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் விசாரணை நடத்தியது.

மஹர சிறைச்சாலையில் சுமார் 7 வருடங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பில் இந்த விசாரணை நடத்தப்பட்டது.

இதன் போது குறித்த நபருக்கு எதிராக குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாத பொலிஸார் அவரை 14 நாட்களுக்கு ஒருமுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்து தடுத்து வைத்திருப்பதாகவும் மன்றில் சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் போது கருத்துரைத்த பிரதம நீதியரசர் அசோக டி சில்வா உயர் நீதிமன்றத்தை பிணை வழங்கும் நீதிமன்றமாக மாற்ற வேண்டாம் என சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவித்தார்.

குற்றம் செய்தவர்கள் எனக் கூறி கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய முடியாது போனால் அவர்களுக்கு பிணை வழங்குவது தொடர்பில் ஆஜராகவேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளதுடன்,

இந்த நிலையில் நாடு முழுவதிலும் இவ்வாறு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியலை சட்ட உதவி ஆணைக்குழு உயர் நீதிமன்றத்தில் சமர்பிக்குமாறு உத்தரவிட்ட உயர் நீதிமன்றம் நீண்டகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களுக்கு பிணை வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு அறிவித்தார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின்

## சிக்காக்கோ சொற்பொழிவுகள்



சூறாவளியில் சிக்கி, ஒரு கணம் கடல் அலையின் நுரை நிறைந்த உச்சிக்குத் தள்ளப்பட்டு அடுத்த கணமே, 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டிருக்கும் பள்ளத்தில் வீழ்த்தப்பட்டு, நல்வினை, தீவினைகளின் ஆதிக்கத்தில் மேலும் கீழுமாக உருண்டு உழன்று கொண்டிருக்கும் ஒரு சிறு படகா மனிதன்? கடுஞ் சீற்றமும் படுவேகமும் தணியாத தன்மையும் கொண்ட காரண காரியம் என்னும் நீரோட்டத்தில் அகப்பட்டு, அழிந்து போகின்ற, சக்தியற்ற, உதவியற்ற பொருளா மனிதன்? இல்லை, விதவையின் கண்ணீரைக் கண்டும், அனாதையின் அழுகுரலைக் கேட்டும், சற்றும் நிற்காமல், தான் செல்லும் வழியிலுள்ள அனைத்தையும் நசுக்கிக் கொண்டு உருண்டு ஓடும் காரணம் என்னும் சக்கரத்தின் அடியில் எறியப்பட்ட புழுவைப் போன்றவனா மனிதன்?





புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர மற்றும் யாழ்.சிறைச்சாலை காவலர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று யாழ்.சிறைச்சாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டியூ குணசேகர, சிறைச்சாலை ஆணையாளர் மேஜர் ஜெனரல் வி.ஆர்.சில்வா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.
படங்கள்: எஸ்.கரன்

# கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு பாடசாலை பௌதிகவளம் ஒரு தடையல்ல

## வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கரவெட்டி)

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு பாடசாலை பௌதிக வளம் ஒரு தடைவை அல்ல, அவர்கள் தொடர்ந்தும் கல்வியில் சாதனை நிலை நாட்டி சமூகத்தில் சிறந்த கல்விமான்களாக திகழ்வார்கள் என்று வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வை.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் எமது வடமராட்சி பிரதேசங்களில் உள்ள பௌதிக வளம் குறைந்து காணப்படுகின்ற பாடசாலையில் இருந்து பல மாணவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் சென்று சமூகங்களில் பலர் இன்று உயர்பதவிகள் வகித்து வருகின்றனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இம்முறை அதிக புள்ளிகளைப் பெற்று இரு மாணவர்கள் தமது பாடசாலையின் வரலாற்றை மாற்றி அமைத்துள்ளனர்.

எனவே மாணவர்கள் கல்வியில் அக்கறை கொண்டு பல வெற்றிகளையும் சாதனைகளையும் படைத்து சமூகத்திற்கு சிறந்த கல்விமான்களாக திகழ வேண்டும். அவர்கள் எதிர்காலத்தில் உயர் பதவிகளை வகித்து சமூகத்தின் அபிவிருத்திக்கு பங்காற்றுவார்கள் என்று தாம் நம்புவதாக தெரிவித்தார். (ஸ்ரீ-24)

## போலிக் கடவுச் சீட்டுக்களில் பிரிட்டன் செல்ல முயற்சி

### ஈரானியர்கள் இருவர் கைது

(கொழும்பு)

போலியான கடவுச்சீட்டுக்களில் இலங்கையிலிருந்து பிரித்தானியா செல்ல முயன்ற ஈரானியர்கள் இருவர் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் இத்தகவலை உறுதிப்படுத்தி உள்ளார்கள். ஈரானிய பிரஜைகள் இருவருக்கும் எதிராக நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# போலிக் கடவுச்சீட்டுக்களைகண்டறிய விமான நிலையத்தில் விசேட காரியாலயம்

(கொழும்பு)

போலியான கடவுச்சீட்டுக்கள் மற்றும் ஆவணங்களை துல்லியமாக கண்டறிவதற்கான விசேட பிரிவொன்று கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உதவியில் ரூபாய் மூன்று மில்லியன் செலவில் இந்த நவீன பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக போலியாக தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்படும் ஆவணங்கள் மற்றும் கடவுச் சீட்டுக்கள், உத்தியோக முத்திரைகளை பரிசீலனை செய்து உண்மைத் தன்மையை வெளிப்படுத்தும் விதத்திலான உபகரணங்கள் இப்பிரிவில் பொருத்தப்பட்டுள்ளன.

அத்தோடு கணனியை பயன்படுத்தி தயாரிக்கப்படும் போலியான புகைப்படங்களையும் இதனால் கண்டுபிடிக்கமுடியும்.

நவீன தொழில்நுட்பத்துடனான (Border control) கணனிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் சர்வதேச உளவுத் தகவல்களை தெரிந்து கொள்வது சட்டவிரோத குடிவரவுகள் தொடர்பாகக் கண்டறிவதுவிசேட நோக்கமாகும்.

குடிவரவு மற்றும் குடியகல்வுதிணைக்களத்தின் முயற்சியினால் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விசேட பிரிவை இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் திருமதி கெத்தே க்ளக்மான் ஆரம்பித்து வைத்தார்.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுப் பணிப்பாளர் சூலாநந்த பெரேரா மற்றும் விமான நிறுவனத்தலைவர் பிரசன்ன விக்கிரமசூரிய ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-2)

## வாழைச்சேனை பிரதேசசபை உதவித் தவிசாளர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச சபையின் உதவி தவிசாளர் வடிவேல் ரவிச்சந்திரன், குற்றப்.புலனாய்வு துறையினரால் அவரது தனிப்பட்ட அலுவலகத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட அவர், மத்திய மாகாணத்திலுள்ள நுவரெலிய பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரை சென்று பார்வையிட்ட அவரது மனைவி செல்வந்தினி தமது கணவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் என்னவென்பது தெரியவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ரவிச்சந்திரன், கிழக்கு மாகாண முதலமைச்சரின் நெருங்கிய நண்பராவார். (ச-5)

## மூதூரில் படகுப்பாதை விபத்து கடலில் தத்தளித்த 22 பேர் மீட்பு

(மட்டக்களப்பு)

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா-மூதூரை இணைக்கும் இறால் குழிப் பாதையின் உப்பாற்றின் மேலான பயணிகளுக்கான படகுப்பாதை பழுதடைந்த காரணத்தால் அதில் பயணித்தவர்கள் கடலில் பாய்ந்து தத்தளித்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

படகுப் பாதையின் இயந்திரம் பழுதடைந்த போது அதில் சுமார் 70 பேர் வரை பயணித்தனர். இயந்திரம் பழுதடைந்த நிலையில் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட படகுப் பாதை கடலின் நடுவே போடப்பட்டிருந்த மின்கம்பமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

அதனையடுத்த மின்சாரம் தாக்கலாம் என்ற அச்சத்தில் அதில் பயணித்த 22 பேர் கடலில் குதித்து தத்தளித்துள்ளனர்.

அப்பிரதேசத்தில் ரோந்தில் ஈடுபட்ட கடற்படை அவர்களைக் கண்டு விரைந்து காப்பாற்றியதில் எவருக்கும் உயிர் ஆபத்து ஏற்படவில்லை என்றும் தெரிகின்றது.



கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டு நீண்ட காலமாகியும் கிண்ணியா-மூதூர் பாதை இன்னும் சரிவர நிர்மாணிக்கப்படாமை, அதில் பயணிக்கும் பயணிகளை சிரமத்துக்குள்ளாகும் விடயமாகும் என்று பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-5)

## விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கை தொழில் நுட்ப கல்விச் சேவையின் மூன்றாம் வகுப்பு விரிவுரையாளர் பதவிகளுக்கு ஆட் சேர்ப்பு போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை நவம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்வி பயிற்சி திணைக்களம், த.பெ.இல. 557 கொழும்பு 10 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். (ச)

இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளையில் அண்மையில் சிறுவர் சேமிப்புக் கணக்கின் வெற்றியாளர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன்போது வங்கியின் நிறைவேற்று உத்தியோகத்தர் நா.கணேசநாதன் உரையாற்றுவதையும், கிளை முகாமையாளர் எஸ்.வி.அரசகுமார், வட பிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், இணுவில் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.சதானந்தன், ஓய்வு பெற்ற இலங்கை வங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் பாலசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ஆறு.திருமுருகனுக்கு நினைவுப்பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# ராஜஸ்தான் அணி நீக்கம் நடிகை ஷில்பா வேதனை



(மும்பை)

இந்தியன் பிரிமியர் லீக் ( ஐ.பி.எல் ) அமைப்பில் இருந்து ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை நீக்கியதற்கு, அதன் உரிமையாளர்களில் ஒருவரான நடிகை ஷில்பா ஷெட்டி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2008ல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) சார்பில் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ. பி.எல்) அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஐ.பி.எல் "இருபது-20' போட்டிகள் ஆண்டு தோறும் வெற்றிகரமாக நடந்தன. இதில், மும்பை இந்தியன்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸ் உள்ளிட்ட 8 அணிகள் பங்கேற்றன. ஒவ்வொரு அணியும் ஏலம் மூலம் கோடிகள் கொடுத்து வாங்கப்பட்டன.

**ராஜஸ்தான் நீக்கம்**

இதில் ராஜஸ்தான்ரோயல்ஸ் அணியும் ஒன்று. இந்த அணியை "எமர்ஜிங் மீடியா' நிறுவனம் ரூ.268 கோடிக்கு ஏலத்தில் எடுத்தது. ராஜஸ்தான் அணியின் பெரும்பாலான பங்குகளை பாலிவுட் நடிகை ஷில்பா ஷெட்டி வாங்கினார். இந்த அணியின் உரிமையாளர்கள் யார் என்பது குறித்த முறையான தகவலை, இந்திய கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ ) தெரிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

இதே பிரச்சினையில், பாலிவுட் நடிகை பிரீத்தி ஜிந்தாவின் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் சிக்கியது. இதனையடுத்து இவ்விரு அணிகளின் உரிமையை பி.சி.சி.ஐ இரத்து செய்தது.


**ஷில்பா பாய்ச்சல்**

இது குறித்து நேற்று முன்தினம் ஷில்பா கூறுகையில்,

கடந்த 2008ம் ஆண்டு 10 ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை ஏலத்தில் எடுத்தோம். எங்கள் அணியின் உரிமையாளர் யார் என்பதில் எந்த பிரச்சினையும் இதுவரை இல்லை. ஆனால் முறையாக எந்த தகவலும் அளிக்காமல், அதிரடியாக ராஜஸ்தான் அணியின் உரிமையை பி.சி.சி.ஐ. ரத்து செய்துள்ளது வருத்தம் அளிக்கிறது.

எங்கள் அணியில் எனது கணவர் ராஜ் குந்த்ரா மட்டுமே, உரிமையாளர் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டார். இது பி.சி.சி.ஐ. யின் முறையான அனுமதிக்கு பின் தான் நடந்தது. ஐ.பி.எல்., முன்னாள் தலைவர் லலித் மோடிக்கும், ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கும் எந்த தொடர்பும் இல்லை. ராஜஸ்தான் அணியில் அவரது பங்குகள் இருப்பதாக கூறப்படுவதில் உண்மை இல்லை. இது குறித்து முறையான, நம்பகமான விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

# ஜேம்ஸ், வினோத்குமார் அதிரடி சென்றலைட் அணி அரையிறுதியில்



ஜேம்ஸ், வினோத்குமாரின் அதிரடியான துடுப்பாட்டம், பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சு ஆகியவற்றினால் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகத்தினை வென்று அரையிறுதிக்குள் நுழைந்தது சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் (கே.சி.சி.சி ) யாழ்.மாவட்டக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

மேற்படி போட்டிகளின் காலிறுதிப் போட்டி ஒன்றில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற மானிப்பாய் பரிஸ் முதலில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தினைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதற்கிணங்க முதலில் துடுப்பெடுத் தாடக் களமிறங்கிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் ஆரம்ப அடித்தளத்தை பலமாக இட்டது. ஆரம்ப வீரர் வினோத் குமார் அதிரடியாக ஆடி 38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். வினோத்தின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து மேலும் 3 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டன. இருந்தும் 6ஆவது வீரராகக் களமிறங்கிய ஜேம்ஸ் தனது பொறுப்பான ஆட்டத்தினால் விக்கெட் இழப்பினைத் தடுத்தார்.

பின்வரிசை வீரர்களும் கூடவே கை கொடுக்க சென்றலைட்ஸ் 200 ஓட்டங்களைக் கடந்தது. இதில் 28.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.

இதில் ஜேம்ஸ் 37 பந்துகளில் 59 ஓட்டங்களையும், ஜெரிக், மதுசன் முறையே 28, 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் மானிப்பாய் பரிஸ் சார்பாக ஹரிகரன், ராஜா தலா 3 விக்கெட்களையும், வினோத் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 204 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம், ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டங்கள் நம்பிக்கையளித்தன. ஆரம்ப வீரர்களான கோபி, வினோத் முறையே 35, 39 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து விக்கெட்கள் மளமளவென வீழ்த்தப்பட்டன. இறுதியில் 28.1 ஓவர்களில் 157 ஓட்டங்களுக்கு மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் அனைத்து விக்கெட்களையும் இழந்து, 46 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. சுகதீபன், நிதர்சனன் முறையே 18, 14 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் சார்பாக ஜெனோசன், மதுசாந், பிரகாஸ் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

# விஷ்ணுபிரகாஸ் பந்துவீச்சில் அபாரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் வெற்றி

விஷ்ணுபிரகாஸின் அபாரமான பந்துவீச்சினால் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தினை வென்று அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணி.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் (கே.சி.சி.சி) யாழ்.மாவட்டக்கழகங்களுக்கிடையில் அணிக்கு 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

மேற்படி போட்டிகளின் காலிறுதிப் போட்டியொன்றில் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் முதலில் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

அதற்கிணங்கக் களமிறங்கிய ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் நிதான ஆட்டத்தினை வெளிப்படுத்தியது. நிரோஜன் தன் துடுப்பாட்டம் மூலம் அணிக்கு பங்களிப்பினை வழங்க ஸ்கந்தா அணி ஓட்டங்களைச் சேர்த்தது.

இறுதியில் 27.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 161 ஓட்டங்களை ஸ்கந்தா அணி எடுத்தது. துடுப்பாட்டத்தில் நிரோஜன் 37 ஓட்டங்களையும், சஞ்சீவன், ஜசிதரன், ராஜ் முறையே 26, 24, 28 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி சார்பாக கஜதீபன் 3 விக்கெட்களையும், ரஜீவ், ரஜனி, செல்வா முறையே தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 162 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்திற்கு ஆரம்ப விக்கெட் நம்பிக்கையளித்த போதும் பின்வரிசை படுமோசமாக அமைந்தது.

ஸ்கந்தா அணியின் பந்துவீச்சாளர் விஷ்ணு பிரகாஸின் அபாரமான பந்து வீச்சினால் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்தது ஸ்ரான்லி அணி.

இறுதியில் ஸ்ரான்லி அணி 16.5 ஓவர்களில் 97 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து 64 ஓட்டங்களால் தோற்றது. துடுப்பாட்டத்தில் குணா 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் ஸ்கந்தா சார்பாக விஷ்ணு பிரகாஸ் 20 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களையும் நிரோஜன், கிருஸ்ணா தலா 2 விக்கெட்களையும் நிரோஜன், கிருஸ்ணா தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# யாழ்.பல்கலைக்கழக அணி அடுத்த சுற்றில்

ஜெயரூபனின் சகலதுறை ஆட்டம் கை கொடுக்க அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி.

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் (கே.சி.சி.சி) யாழ். மாவட்டக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கட் சுற்றுப் போட்டி ஒன்றை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

மேற்படி போட்டிகளின் காலிறுதிப் போட்டியொன்று நேற்று நடைபெற்ற போட்டியொன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினை எதிர்த்து ஜொலிஸ்ரர் விளையாட்டுக் கழகம் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி தொடக்கத்தில் அடுத்தடுத்து விக்கெட்டுக்களையிழந்தது. எனினும் ஆரம்பம் முதல் ஒரு முனையில் தனித்துநின்று அதிரடியாக ஆடிக் கொண்டிருந்த ஜெரூபனின் ஆட்டம் மற்றும் நடுவரிசை வீரராகக் களமிறங்கிய ஜனார்த்தனன் ஆகியோரின் துடுப்பாட்டத்தினால் ஓட்டங்களை விரைவாக சேர்ந்தது.

ஜெரூபன் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்து 66 ஓட்டங்களை எடுத்தும் ஜனார்த்தனன் 56 ஓட்டங்களை எடுத்தும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து பின்வரிசை வீரர்கள் தம் பங்கிற்கு ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்க 29.5 ஓவர்கள் நிறைவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்து 216 ஓட்டங்களை எடுத்தது.

பவி, செல்ரன் முறையே 35,17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணி சார்பாக ஹரிவதனன், மயூரன், லவன்ரன் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 217 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பாடக் களமிறங்கிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஆரம்ப அடித்தளம் பலமாக இட்டது. எனினும் முன்வரிசை விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட்ட பின்னர் அணியின் ஓட்ட எண்ணிக்கையில் தொய்வு ஏற்பட்டது.

பின்வரிசை வீரர்கள் அதிரடி காட்டிய போதும் கைவசம் விக்கெட்டுக்கள் இல்லாததினால் ஜொலிஸ்ரார் அணி தோல்வியைச் சந்தித்தது. இறுதியில் 29.2 ஓவர்களில் 200 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்து 16 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் அதிரடி ஆட்டத்தினை வெளிப்படுத்திய அகிலன் 67 ஓட்டங்களையும், அன்புயன், மயூரன் முறையே 40, 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.



பந்துவீச்சில் திவாகரன் 3 விக்கெட்டுக்களையும், ஜெயரூபன், நிசாந்தன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.







எஸ்.பி.பினான்ஸ் நிறுவனத்தின் கிளைத்திறப்பு விழா நிகழ்வில் மங்கள வாத்திய இசையுடன் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும், மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் உரை நிகழ்த்துவதையும் வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து எஸ்.பி.பினான் ஸின் பிரதித் தலைவர் தம்மிக்க பெரேரா வைப்புப்பணத்தைப் பெற்றுக் கொள்வ தையும் படங்களில் காணலாம்.

# இலங்கை நாடாளுமன்றக் குழுவுக்கு இந்திய லோக்சபாவிலிருந்து அழைப்பு

(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையிலான நர்டாளுமன்ற உறுப்பினர்களின் குழுவொன்றை இந்தியாவுக்கு விஜயம் செய்யுமாறு இந்திய நாடாளுமன்றத்தின் ராஜ்ய சபா மற்றும் லோக்சபா ஆகியவற்றிலிருந்து கூட்டு அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே காந்தா இதற்கான உத்தியோகபூர்வ கடிதத்தை இலங்கையின் நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் கையளித்தார்.

இதில் இந்திய ராஜ்ய சபாவின் தலைவர் மொஹமட் ஹமீத் அன்சாரி,லோக்சபா சபாநாயகர் மீரா குமார் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டிருப்பதாகவும் மிக விரைவில் அவர் தலைமையிலான நாடாளுமன்றக் குழுவொன்று இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது. (ச-5)

## புலிகளின் நியாயங்...

அளிக்குமாறு மிகவும் மரியாதையுடன் இந்திய அரசாங்கத்திடம் கோரி நிற்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றில் ஆஜராகும் விடுதலைப் புலி உறுப்பினர் இலங்கைக்கு நாடு கடத்தப் படவோ அல்லது தண்டனை விதிக்கப்படவோ மாட்டார் என்ற உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டுமெனவும்தமது சுதந்திரப் போராட்டத்திற்கு நியாயமான வகையில் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை,தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களினால் தடைக்கு எதிரான வாதங்களை முன்வைக்க முடியாது என மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் சான்டியொக் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## தமிழ் மக்களின் பிரச்...

அழைப்பு விடுத்தால் அது தொடர்பில் எமது கட்சி கலந்தாலோசிக்கும் என இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

இதேவேளை தமிழ் கட்சியின் அரங்கத்தில் இணையுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அடுத்த வாரம் சந்தித்து அழைப்பு விடுக்கவுள்ளதாக தமிழ் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (ச-5)

## முஸ்லிம்களின் ஆயுதப்...

பின்னரான தற்போதைய சூழ்நிலையில் இன்னொரு வகையான பங்கு வகிப்பதாகவும் தூதுக்குழுவிடம் தெரிவித்தார்.

இலங்கையில் முஸ்லிம் பயங்கரவாத இயக்கங்கள் செயற்படுவதாக தெரிவிக்கப்படும் பிரசாரங்கள் முற்றிலும் பொய்யானவை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டதன் மூலம் முஸ்லிம்கள் ஆயுதம் தூக்க வேண்டிய நிலை இல்லாமல் செய்யப்பட்டது.

இலங்கையின் முஸ்லிம்கள் மத்தியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாத்திரத்தின் பங்கு தொடர்பாக பிரித்தானிய தூதுக்குழுவுக்கு விளங்கப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதுடன் வட மாகாண முஸ்லிம்களின் இன்றைய நிலை தொடர்பாக இச் சந்திப்பின் போது தூதுக் குழுவினருக்கு விளக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், செயலாளர் ஹசன் அலி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-5)

## பெண் புலி உறுப்பினர்...

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டியூ குணசேகர மேலும் கூறியதாவது, வன்னிப் போரின்போது படையினரிடம் சரணடைந்த சுமார் ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது.

அத்துடன் இப் போரின் போது படையினரிடம் சரணடைந்த 11 ஆயிரத்து 868 விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களில் 90 சதவீதமானவர்கள் சாதாரண தரம் வரை கல்வி கற்றவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில் தற்போது 304 பெண்கள் உட்பட 4 ஆயிரத்து 460 விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்ட நிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பூந்தோட்டத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் மேலும் சில முன்னாள் பெண் உறுப்பினர்கள் இன்று அவர்களின் பெற்றோரிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

இதனையடுத்து வன்னிப்போரின் போது படையினரிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் அனைத்துப் பெண் உறுப்பினர்களும் விடுவிக்கப்பட்டு விடுவார்கள் என்றும் அமைச்சர் டியூ குணசேகர தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## தயாசிறி...

சரத் பொன்சேகா மத அனுஷ்டானங்களுடன் சிறையிலே நாட்களை ஆரம்பிப்பதாகவும் தயாசிறி ஜெயசேகர கூறினார்.

உறவினர்கள் மற்றும் நண்பர்களால் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட புதினப் பத்திரிக்கைகள்,சஞ்சிகைகளை சரத் பொன்சேகா வாசித்து வருவதுடன் ஓய்வு நேரங்களிலேயே தொலைக்காட்சி நிகழ்சியினை பார்ப்பதாகவும் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார். (ச-5)

## ரணில்-சொல்...

சங்க உறுப்பினரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் பிரித்தானியாவின் வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹக் மற்றும் லியம் பொக்ஸ் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

**காணி விற்பனைக்கு**

அளவெட்டி மலைவேம்படிச் சந்திக்கு அருகில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0754636860 (2704)

## முல்லைத்தீவுக்குச் சென்ற...

தேவையான வசதிகளை செய்துகொடுக்குமாறு புதுமாத்தளன் இராணுவ முகாமின் பொறுப்பதிகாரிக்கு மேல் மட்டத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைய செயற்பட்ட அந்த இராணுவ அதிகாரி இவர்களுக்கு தேவையான உச்ச அளவிலான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.இந்த முக்கியஸ்தர்களில் அரசாங்கத்தினால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் குமரன் பத்மநாதனும் ஒருவர்.

இந்த விஜயத்தின் போது, கே.பியின் பயண பொதியை விமானப்படைச் சிப்பாய் ஒருவரே சுமந்துச் சென்றுள்ளார்.இந்த சம்பவத்தை அடுத்து, படையினர் மத்தியில் பெரும் அதிருப்தி நிலைமை ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த நிகழ்வில் குமரன் பத்மநாதன் வட மாகாணத்தின் எதிர்கால முதலமைச்சர் என்றே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார் எனவும் அந்த கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. (ச-5)

## புலிகளின் தலைவர் பிர...

இணையத்தளம் ஒன்றின் மூலமாக ஒளிபரப்பப்படுகின்றன என்று கதையொன்று பரவலாக அங்கு உலாவியது.

அடர்ந்த தீவு போன்ற பகுதி ஒன்றில் பிரபாகரன் சுற்றிவருகின்றார் என்றும் தாடியுடன் காணப்படுகிறார் என்றும் ஒளிபரப்பப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. இதனால் தமிழகம் எங்கும் நேற்று நெற்கபேகளில் ஆட்கள் வகைதொகை இன்றி குவிந்தனர்.

குறிப்பாக திருச்சியில் நெற்கபேகளில் மக்கள் நிரம்பி வழிந்தனர். ஆனால் இணையங்களில் பார்வையிட்டவர்கள் அப்படி எதுவும் ஒளிபரப்பப்படவில்லை என்று தெரிவிக்கின்றனர். (எ-1)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி அம்மா செல்லையா

(ஓய்வுபெற்ற ஆசிரியை , புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், அவுஸ்திரேலியா சிட்னியில் வசித்து வந்தவருமாகிய திருமதி சரஸ்வதி அம்மா செல்லையா அவர்கள் கடந்த 20.10.2010 புதன்கிழமையன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் செல்லையா இளையதம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் கலாராணி,மோகன்,ஜெயகௌரி, கேதீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருச்செல்வம் ,சறோஜினி,ஜெயகுமார்,கௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் விசாகன், வாகீசன், ஸ்ருதி, ஆதித்தியா, அபிநயா, பைரவி, வைஷ்ணவி, விதுரஷன் கேஷினி ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 23.10.2010 சனிக்கிழமையன்று அவுஸ்திரேலியா ,சிட்னியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி.
021 222 0051

தகவல்:
இ.முத்துலிங்கம்
(மைத்துனர்)

(2721)

Victoria YOGHURT

Denmark Dairy Lanka

ஆரம்பவிழா அழைப்பு

இடம் : இல.325,பரமேஸ்வராச்சந்தி,திருநெல்வேலி.

Distributor:
Koormai Multi vision
Paramesvara Junction
Thirunelvely, Jaffna.

காலம் :23.10.2010 சனிக்கிழமை

நேரம்:மாலை 04.01 மணி

இந்நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-1451)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.